★ விலை ரூபா 1.00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 29 ரபீ. ஆகி 27 இதழ் 1

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11—2—83

ஆங்கில வகுப்புகள்
(ENGLISH)
ஆரம்பம்: 12-02-83
சனி. ஞாயிறு மட்டும்
ஆசிரியர்
ஆர். கந்தையா
(பலாலி ஆசிரிய கல்லூரி முன்னைநாள் ஆலோசகர்)
327, நாவலர் வீதி,
(வைமன் வீதி சந்தி)
யாழ்ப்பாணம், 6150

## ஆட்கொணர்வு மனுதாக்கல்

(கொழும்பு)

சென்ற வருடம், ஆகஸ்ட் மாதம் 20-ம் திகதி கைது செய்யப்பட்ட மயில்வாகனம் சின்னையாவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கோரி நேற்று உடபீல் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகள் வி. எஸ். ஏ. புள்ளைநாயகம், ஸி சந்திரகாசன், எஸ். பேரின்பநாயகம் ஆகியோர் நேற்று ஆஜராகி, இம்மனுவைத் தாக்கல் செய்தனர்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. வேரப்பிட்டிய, ஐ. ஜி. பி. திரு. ருத்ரா ராஜசிங்

(10-ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர், பிரதி அமைச்சர்கள்

# 10 எம்.பிக்கள் ராஜினாமா!

[இ. சந்தசாமி]

**ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் பதவிவகித்த ஒரு அமைச்சர், ஆறு பிரதி அமைச்சர்கள், இரண்டு மாவட்ட அமைச்சர்கள் உட்பட பதினேழு எம். பி.க்கள் பாராளுமன்றத்தில் தமது உறுப்பினர் பதவிகளை நேற்று ராஜினாமாச்செய்துள்ளனர்.**

பாராளுமன்றம் நேற்றுப் பிற்பகல் கூடியபோது, சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் இந்த ராஜினாமாக்களைச் சபையில் அறிவித்தார்.

பெலியத்த தொகுதி எம். பி.யாக இருந்த கொழும்பு மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்குப் பொறுப்பான அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்துவே தமது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த அமைச்சராவார்.

### பிரதி அமைச்சர்கள்

விவசாய அபிவிருத்தித் துறை பிரதி அமைச்சரும், ஹம்மனை எம். பி.யுமான ஹரிசனத் வணிகசேகரா, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும், ரத்ஹம எம். பி.யுமான எட்வன் திலகரத்தின, தனிப்பட்ட பஸ் போக்குவரத்துகளுக்குப் பொறுப்பான அமைச்சின் பிரதி அமைச்சரும், மஹரகம தொகுதியின் எம். பி.யுமான பிரேமரட்ண குணசேகர, எகலியகொட தொகுதி எம். பி.யும், பாதுகாப்பு பிரதி அமைச்சருமான திரு. மேவின் குலரத்தின, அரச பெருந்தோட்ட பிரதி அமைச்சரும், களுத்துறை எம். பி.யுமான வி எல். விஜயமானே ஆகியோரே ராஜினாமாச் செய்த பிரதி அமைச்சர்களாவார்கள்.

ராஜினாமாச் செய்துள்ள மற்றைய உறுப்பினர்கள் விபரம் வருமாறு:

மஹர: ரியுடோர் குணசேகர, திஸ்ஸமஹாராம: வி எம். வி. சிறில், அக்மீமன: சுமணதாச அபேவிக்கிரம, பத்தேகம: சேபால அக்குருகொட, அம்பலாங்கொட: ரியுட்டர் திலகசேகர, கம்புறுபிட்டிய அல்பேட் த சில்வா, தங்காலை: ஜினதாசவீரசிங்க, ஹபராதுவ பி. சுமதிரத்ன, பாணந்துறை பி. பொன்சேகா, முல்கிரிகல: ரி. டி. பிரான்ஸிஸ்கோ, மத்துகம: வி. விஜேயகுணரத்தின.

## வடபகுதி ராணுவ முகாமில்

# நிழலாட்டம் கண்டு

## வேட்டு தீர்க்கப்பட்டதா?

(யாழ்ப்பாணம்)

வடபகுதி இராணுவ முகாமொன்றில் அதிகாலை வேளையில் ஏற்பட்ட திடீர் சலசலப்பைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் பலதடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனரா?

சில தினங்களுக்கு முன்னர் அதிகாலை வேளையில், முகாம் வாசலில் காவலில் நின்ற சிப்பாய், ஒருவர் சில அடி தூரத்தில் நிழலாடுவதை அவதானித்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இத்துப்பாக்கி வேட்டுச் சத்தத்தைக் கேட்டு அருகிலிருந்த மற்றுமொரு பாதுகாப்பு படை சிப்பாய் தனது 'சப்மெஷின்' துப்பாக்கியினால் 'மளமள' என்று முப்பதுக்கும் அதிகமான தடவைகள் வேட்டுகளைத் தீர்த்ததாகவும் அறியப்படுகிறது.

பாதுகாப்புப் படையினர் இவ்வளவு உஷாராக இருந்த போதிலும் அங்கு நிழலாடிய உருவம் பற்றி கண்டுபிடிக்க முடியவில்லையாம்!

## மாணவர்கள் உண்ணாவிரதம்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மேற்கு வாசலில் மாணவர்கள் இன்று உண்ணாவிரதம் இருப்பார்கள்.

10-ம் பக்கம் பார்க்க)

# சபையில் அமளி துமளி!

[கொழும்பு]

நேற்று பாராளுமன்றம் கூடியபோது சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்திருந்த பின்னர் புளத்சிங்களத் தொகுதிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. றெனிடி மெல் படைக்கல சேவிதரால் பிரதானவாசல்வழியாக அழைத்து வரப்பட்டு சபாநாயகரின் ஆசனத்துக்கருகில் அமர்த்தப்பட்டார்.

பின்னர் திரு. றெனிடிமெல் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள எழுந்தபொழுது சபையில் பல ஒழுங்குப் பிரச்னைகளும் வாக்குவாதங்களும் கிளம்பின.

ராஜினாமாச் செய்துள்ள 17 எம் பிக்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டதையடுத்து சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் ஒழுங்குப் பிரச்னையொன்றைக் கிளப்பினர்

ராஜினாமாச் செயதுள்ளவர்கள் என்ன காரணத்துக்காக இவ்வாறு செய்துள்ளார்கள் என்பதை சபைக்கு அறிவிக்க வேண்டும் என்றும் ராஜினாமாக் கடிதங்களை வாசிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்,

எந்த ஷரத்தின் கீழ் இந்த ஒழுங்குப்பிரச்னை கிளப்பப் படுகின்றது என சபாநாயகர் வினவினர் இதற்கு ஷரத்துகள் தேவையில்லை யென்றும் சபை அறியவேண்டும் என்பதே தமது கருத்து என்றும் திரு. நவரத்தினம் கூறினர்.

சபையில் ஒரே கூச்சலாகவிருந்தது. கல்வி அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்கா எழுந்து; கொலைகாரரை எம். பி. யாக்கியவர்கள் இங்கு இவ்வாறான கேள்விகளை எழுப்புகிறார்கள். இவர்களுக்கு என்ன தகுதியிருக்கிறது எனக்கேட்டார்.

திரு. நவரத்தினம் அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று குறிப்பிட்டார்.

சபாநாயகர் இந்த ஒழுங்குப்பிரச்னையை நிராகரித்தார்.

இதையடுத்து புளத்சிங்களத் தொகுதியின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. றெனிடி

[10-ம் பக்கம் பார்க்க]

# 'சிங்கராயர் கடிதம் குறித்து நடவடிக்கைஎடுக்கவேண்டும்'

## பாராளுமன்றத்தில் 'அமிர்' வற்புறுத்து

[கொழும்பு]

'தமிழ் இளைஞர்களும், தானும் சித்திரவதை செய்யப்பட்டது குறித்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கு வண. பிதா. சிங்கராயர் கடிதம் எழுதியிருந்தார். பிரதமர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

ஒத்திவைப்புப் பிரேரணை மீது திரு. அமிர்தலிங்கம்

[10 ம் பக்கம் பார்க்க]

# ஈழமாணவர் மன்றத்தின் 3 நாள் எழுச்சியாத்திரை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரியும், இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், தொடர்ச்சியாக மூன்றுநாள் எழுச்சியாத்திரையை நடத்த ஈழமாணவர் பொதுமன்றம் தீர்மானித்துள்ளது.

இது சம்பந்தமாக ஈழமாணவர் பொதுமன்ற நிர்வாக செயலாளர் திரு. மு. டேவிற்சன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

'அரசின் சால ஒடுக்குமுறைகளை எதிர்த்தும் மூன்று நாட்கள் தொடர்ந்து நீண்ட புரட்சிகர எழுச்சி யாத்திரை ஒன்றை நடத்த ஈழமாணவர் பொது மன்றம் தீர்மானித்துள்ளது. யாத்திரையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர், விவசாயிகள் இளைஞர்கள், பெண்கள், மாணவர்களை இணைப்பதற்கு ஈழமாணவர் பொதுமன்ற அங்கத்தினர்கள் தொகுதி ரீதியாக ஒழுங்குகளை செய்து வருகின்றனர். இப்புரட்சிகர யாத்திரை வேலைத்திட்டங்களில் சகல முற்போக்கு சக்திகளையும் அணிதிரண்டு ஆதரவளிக்குமாறு அறைகூவல் விடுக்கின்றோம்'

பாதயாத்திரைக்கான முன்னேற்பாடுகள் செய்தபின்பு மேலதிக விபரங்களை அறியத் தருவோம்'

# ஜனாதிபதியே நிதி அமைச்சர்!

[கொழும்பு]

ஜனாதிபதியே நிதி அமைச்சராக இப்போது பதவி வகிக்கிறாரென்று நேற்றுப பாராளுமன்றத்தில் பிரதமர் அறிவித்தார்.

புளத்சிங்கள புதிய எம். பி, யாக திரு. றெனி டி மெல் நியமிக்கப்பட்ட பின்னர், அவர் இதுவரை காலமும் இருந்த அமைச்சர் ஆசனத்தில் அமராது, பின் ஆசனமொன்றில் நேற்று அமர்ந்து கொண்டதை அடுத்து, எதிர்க்கட்சி எம். பிக்கள் சரத்முத்தேட்டுஹமவும், திரு. அனுரா பண்டாரநாயக்காவும் "யார் இப்போது நிதி அமைச்சர்?" என்ற கேள்வியை எழுப்பினர்கள்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இதற்குப் பதிலளித்துப் பேசுகையில், "ஜனாதிபதி அவர்களே தற்போது நிதி அமைச்சர் பொறுப்பினையும் ஏற்றுள்ளார்" என்று பதிலளித்தார், [இ]

## சுவாமி பிரேமானந்தஜி விசாரணை

(யாழ்ப்பாணம்)

பூபாலகிருஷ்ண ஆசிரம ஸ்தாபகர் சுவாமி பிரேமானந்தஜீ, அரச அதிகாரிகளினால் விசாரணைக்குட்படுத்தப் பட்டதாகத் தெரியவருகிறது.

சுவாமிஜியைப்பற்றி பல அநாமதேயக்கடிதங்கள், அரச அதிகாரிகளுக்குக் கிடைத்திருப்பதைத் தொடர்ந்தே விசாரணை நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கத்துடனும், தமிழர்

(10ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு மரம் அரியும் மின்சார யந்திரமும், மரம் சீவி அரிந்து வேலைசெய்யும் யந்திரமும் எம்மிடம் விற்பனைக்குண்டு. த. கனகசபை, கோண்டாவில் கிழக்கு (இ. போ. ச அருகாமையில்), நேரில் தொடர்பு கொள்ளவும். 6121

நல்லநிலையிலுள்ள ஒஸ்ரின் 8 கார் CY 6336 உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சு. சண்முகரத்தினசர்மா கோப்பாய் வடக்கு, கோப்பாய். 6151

புத்தம் புதிய AG – 175 மொடல் 8 Sri 3636 யமஹா மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. (350 மைல் மட்டும் ஒடியது) கு. நடராசா (இளைப்பாறிய விதானை) சித்தன்கேணி சந்தி. 6144

## தேவை

அரைக்கும் யந்திரத்தில் (கிறைண்டரில்) வேலை செய்வதற்கு தேக ஆரோக்கியமும் முன் அனுபவமும் உள்ள இரண்டு ஆட்கள் தேவை. முன்வேலை செய்த ஸ்தாபனத்தினால் வழங்கப்பட்ட நற்சாட்சிப்பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றுடன் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி 191, (53) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். 6136

நடுத்தர வயதுள்ள கார் ஓட்டக் கூடிய காவலாளி தேவை தொடர்பு: Dr. சி. ச. சேனாதிராசா மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 6116

ஆங்கிலத்தில் கடிதத் தொடர்புகள் செய்யக்கூடிய கணக்கியல் அறிவுள்ள லிகிதர் தேவை. இளைப்பாறியவர்கள் விரும்பத்தக்கது. 19-2-83ந் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். திருச்செல்வம் அன் கொம்பனி, 510 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 6146

இயூநகரியிலிருக்கும் வெட்டுக்காடு தென்னந்தோட்டத்துக்கு அனுபவமுள்ள மேற்பார்வையாளர் தேவை. தொடர்பு கொள்ளவும். சபாரத்தினம், 40, நல்லூர் ஒழுங்கை சுண்டிக்குளி சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம் 6122

## WANTED

Wanted for immediate engagement either as part time or full time, a person with good knowledge of English and Tamil, to assist in the publication of Books and Magazines in English and Tamil. Apply before 18-2-83 to: advt No: 6154 C/o Eelanadu Ltd, Jaffna. 6154

## வகுப்புகள்

அரசாங்கத்தால் ஒரேயொரு தனியார் நிறுவன சிரேஷ்ட பாடசாலையென அங்கீகரிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடத்தில் G C E. (O/L), G. C.E A/L], G. S Q Bio], B Sc Bio) வரையில் விஞ்ஞான செய்முறைகள் நடைபெற்று வருகிறது, இப்பாடசாலையில் ஒழுக்கம் முதலிடம் வகிக்கிறது. சேரவிரும்புபவர்கள் விண்ணப்பிக்கவும். அதிபர் உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 6147

G S Q [Bio], G. S Q [Physical] 1984ற்குரிய வகுப்புகள் ஆரம்பித்து நடைபெறுகிறது. (இக்கல்லூரியில் விஞ்ஞான செய்முறைகள் பட்டதாரிப் படிப்புக்கேற்ற முறையில் விஞ்ஞானகூடம் அமைக்கப்பட்டுள்ளது.) சேர விரும்பியவர்கள் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக்கல்லூரி, 73 ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். 6135

## வாடகைக்கு

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் அண்மையில் இரண்டு அறையும் குசினியும் கொண்ட சகல வசதியுமுள்ள அனெக்ஸ் (Annex) வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு Pats Power Electricals 601 K. K. S. Road விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (இரண்டு அல்லது மூன்று அங்கத்தவர் கொண்ட சிறிய குடும்பம் விரும்பத்தக்கது) 6153

# விளம்பரம்

சாவகச்சேரி
நகராட்சி மன்றம்

வரவு செலவுத்திட்டம்
1983

(255 ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979 – ம் ஆண்டின் 13–ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3) ம் பிரிவின் பிரகாரம். இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட 1983–ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் தற்பொழுது இவ்வலுவலகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது அலுவலக நேரங்களில் இதனைப் பார்வையிடலாமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சி.க மயில்வாகனம், ஜே.பி.
தலைவர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்ற
அலுவலகம்,
சாவகச்சேரி,
09 – 02 – 1983. 6152

## தசாக அழைப்பு

காலஞ்சென்ற சிவஸ்ரீ. க. சோமசுந்தரக் குருக்கள் அவர்களின் தசாகக் கிரியை எமது இல்லத்தில் 12-02-83 சனிக்கிழமை நடைபெறும். அனைவரையும் அழைக்கிறோம்.

இங்ஙனம்
பெருமகன், மருமகன்
பெருமகள் பேரப்பிள்ளைகள்

சந்தவனம்
பெரவிகண்டி

6133


தெட்சிணமருதமடு

# இனக்கலவர கொலைவழக்கில் சாட்சிகள் ஆஜராகவில்லை

(வவுனியா)

தெட்சிணமருதமடு இனக்கலவர இரட்டைக்கொலை வழக்கு எட்டாவது தடவையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரசதரப்புச் சாட்சிகள் மன்றில் சமூகமாகி இருக்கவில்லை. இதனால் மன்றின் அறிவித்தல் கிடைத்தாக கோர்ட்டில் ஆஜராகுமாறு நீதியதிஎதிரிகளுக்கு உத்தரவிட்டார்.

வவுனியா மேல்நீதிமன்றத்தில் மேல்நீதிமன்ற நீதிபதி திரு ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தெட்சிணமருதமடு வாசிகளான தி. சிவசுப்பிரமணியம், அ. சுப்பிரமணியம். த ஆனந்தன், த. திசைவீரசிங்கம் ஆகியோருக்கு எதிராக 1977 ஆவணிக்கலவர வேளையில் வேறு இலருடன் சட்டவிரோதமாகக் கூடி மடுக்கோவில்பாலம்பிட்டிகிறீன் ஏக்கர் பாம் உரிமையாளரான திருமதி வண்டலின் பெரேரா, பாலித பிரான்சிஸ் பெரேரா ஆகியோரைச் சுட்டுக்கொலைசெய்தது; சுதர்மன் போல் பெரேராவைச் சுட்டுக் கொலைசெய்ய எத்தனித்தது; அவர்கள் குடியிருந்தவீட்டை எரித்தது போன்ற ஒன்பது குற்றச்சாட்டுகள் மேற்படி எதிரிகள்மீது சுமத்தப்பட்டுள்ளன,

எதிரிகளின் சார்பில் சமர்ப்பணம்செய்த சட்டத்தரணி கனக மனோகரன் வாதிடுகையில் இது எட்டாவது தடவையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் இதுவரை கொலைசெய்யப்பட்ட வண்டலின் பெரேராவின் மகனும், பாலித பிரான்சிஸ் பெரேராவின் சகோதரருமான சுதர்மன்போல்பெரேரா பெஸ்டஸ் பெரேரா ஆகியோர் மன்றுக்கு வரவில்லை என்றும். வழக்கைத் தள்ளுபடி செய்யச் சட்டத்தில் இடமில்லை என்றும் எனவே இவ்வழக்கை அரசசட்டத்தரணி வாபஸ்பெறவேண்

(9–ம் பக்கம் பார்க்க)

# மின்மானிகளை திடீர் பரிசோதனை செய்யத்திட்டம்

(கரவெட்டி)

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை நெல்லியடி உப அலுவலகப் பகுதியில் மின்சாரம் பாவிக்கும் வீடுகள், அரிசி ஆலைகள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றிலுள்ள மின்பாவனையைக் காட்டும் அளவைமானிகளை திடீர் பரிசோதனை செய்து பார்வையிடுவதற்கு இவ் உப அலுவலக மின் அத்தியட்சகர் திட்டமிட்டுள்ளார்.

இப்பகுதியிலுள்ள சில அரிசி ஆலைகள், வீடுகளில் மின்பாவனையைக் காட்டும் அளவைமானிகளில் மின் அளவைக் குறைத்துக் காட்டுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருவதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்தே இத்திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

திடீர் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்படும் பாவனையாளர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவர்களுக்கு வழங்கப்படும் மின் இணைப்பும் துண்டிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சாட்டி சிந்தாத்திரை மாதா திருப்பலி

(வேலணை)

வடபகுதியில் பிரசித்தி பெற்ற வழிபாட்டு ஸ்தலமான சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலய மாதாந்த திருப்பலி ஒவ்வொரு மாதத்திலும்இரண்டாவது சனிக்கிழமை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதத்திற்கான திருபலி நாளை சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது. யாத்திரிகர்களின் வசதியையொட்டி ஆலயத்தினூடாக சேவையிலுள்ள பஸ்வண்டிகளின் நேரத்தையொட்டியே திருப்பலி நடத்த ஏற்பாடு செய்திருப்பதாகபங்குத்தந்தை வண. றெஜினோல் ராஜநாயகம் தெரிவித்தார்.

பிற்பகல் 3–30க்கு சாட்டியூடாகயாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவான் செல்லும் பஸ்ஸிலும் அதேநேரம் ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸிலும் பிரயாணிகள் வந்து கலந்து கொள்ளத்தக்கவகையில் திருப்பலி நடைபெறும்.

# மகாதேவா தாம்போதியில் சிரமதானம்

(கரவெட்டி)

உடுப்பிட்டி, பருத்தித்துறை தொகுதிகளைச்சேர்ந்த விசேட சேவை உத்தியோகத்தர்கள் இம்மாதம் 26ம் திகதி மகாதேவா தாம்போதிப் பாலத்தில் சிரமதானம் செய்யவுள்ளார்கள்.

இச்சிரமதானப் பணியில் 15 விசேட சேவை உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

(வெ)

# இந்தியாவின் புதிய செய்மதி ஏவும் சாதனம்

சென்னை பெப், 10

செய்மதிகளை ஏவும் புதிய சாதனமொன்றை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்.

# யாழ். நகரில் பிரஞ்சு படவிழா ஆரம்பமானது!

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பிரஞ்சுத்தூதரகமும், யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவிலுள்ள பிரஞ்சுக் கழகமும் இணைந்து ஒழுங்குசெய்த பிரஞ்சுத் திரைப்படவிழா நேற்றுக்காலை யாழ். சாந்தி தியேட்டரில் ஆரம்பமானது.

இவ்விழாவில் பிரஞ்சுதூதுவராலய கலாச்சாரப் பிரிவு அதிகாரி திரு. ஜெரார்ட், பிரதம விருந்தினராக கலந்துகொண்டு படவிழாவினை நாடாவெட்டி ஆரம்பித்துவைத்தார்.

டாக்டர் வி. பி. அமரசிங்கம் திரு. ஜெராட்டுக்குமாலையணிவித்து வரவேற்புரை நிகழ்த்தினார்.

இவ்விழாவுக்கு தூதுவர் கலந்துகொள்வதாக இருந்தும் தவிர்க்கமுடியாத நிலை காரணமாக அவர் கலந்துகொள்ளவில்லை.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரும் யாழ் மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையாவும் இவ்விழாவில் கலந்துகொண்டார்.

நேற்றையதினம் பிரெஞ்சுத் திரைப்படமான 'டொங்கிஸ் ஸ்கின்' என்னும் திரைப்படம் காண்பிக்கப்பட்டது.

இறுதியாக செல்வி இ. ஜே. அமிதநாதர் நன்றியுரை வழங்கினார்.

பிரஞ்சுக் கழகத்தின் வடமாகாணத் தலைவரான திரு. ஆர். குலேந்திரன் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். இவ்விழாவில் ஏராளமான ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டனர்.

1976ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பிரஞ்சுக் கழகம் சிறப்பாக தமது பணியினை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

(சு மா.)


## பிறந்ததின வாழ்த்து



மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்

கரம்பொனூர் அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும்காலஞ்சென்ற மகேஸ்வரி (பிள்ளை)யின் கணவரும் முத்துலிங்கம் நாகராசாவின் சகோதரரும், முன்னைநாள் அகில இலங்கை பால் தொழிலாளர் சேமநல அதிகாரியும் மலைநாட்டு வியாபாரிகள் சங்கம் சவரசலவைத் தொழிலாளர் சங்க ஆலோசகரும், ஊர்காவற்றுறை வியாபாரியுமான பொன்னுத்துரை தனது 60வது பிறந்ததினத்தை பிள்ளைகள், பேரன் சுரேஸ்குமாருடன் குமரன் ஆலயத்தில் கொண்டாடுகிறார். அவரை அவரது நலன் விரும்பிகள் நீடூழி வாழ்க வென வாழ்த்துகிறார்கள். 6140

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

அணிசேராமகாநாட்டில்

# தியாகோகாஸியா பிரச்னையை மொரீஷியஸ் முன்வைக்கும்!

## - பிரதமர் ஜெந்நாத் அறிவிப்பு

புதுடில்லி. பெப். 10

மொரீஷியஸ் தீவுக்குச் சொந்தமான தியாகோகாஸியாதீவை பிரிட்டனிடமிருந்து மீட்டுக் கொள்வது பற்றிய பேச்சுக்களை புதுடில்லி அணிசேரா மகாநாட்டில் மொரீஷியஸ் முன்வைக்கவுள்ளது.

இத்தகவலை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் மொரீஷியஸ் பிரதம மந்திரி திரு. ஜெந்நாத் தெரிவித்தார்.

புதுடில்லியில் வைத்து பத்திரிகையாளர்கள் இவரைப் பேட்டிகண்டனர். அவர்களிடமே அவர் இதனைத்தெரிவித்தார்.

பிரதமர் ஜெநாத் மேலும் தெரிவித்ததாவது, "இந்துமாகடலில் அந்நிய சக்திகள் நடமாடுவதை மொரீஷியஸ் கண்டிக்கிறது. இந்தவலயம்ஒரு அமைதிப் பிரதேசமாக இருக்கவேண்டுமென்பதையே அது விரும்புகிறது.

இந்துமாகடலில் பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்துவரும் தியாகோகாஸியா தீவு, மொரீஷியஸுக்கு சொந்தமானதே. இதனை பிரிட்டன் மீண்டும் மொரீஸியஸிடம் கொடுக்கவேண்டும்.

இத்தீவை பிரிட்டன் அமெரிக்காவிடம் இராணுவ நடவடிக்கைகளுக்காக குத்தகைக்குக்கொடுத்துள்ளது.

இவ்வாறு அத்தீவு ஒரு இராணுவ தளமாகப் பாவிக்கப்படுவதால் இந்துமாகடல் பிராந்திய நாடுகளுக்குவல்லரசுகளின் இராணுவநடமாட்டம்குறித்த பீதி தொடர்ந்து இருந்துவருகிறது.

எனவே மொரீஷியஸ் தியாகோகாஸியா மீது தனக்குள்ள உரிமையை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ளவும் இந்துமாகடலை அமைதி வலயமாக மாற்றும் வகையிலுமே பிரிட்டனிடமிருந்து தியாகோகாஷியாவை கேட்டுவருகிறது.

அணிசேரா நாடுகள் நிச்சயம் மொரீஷியஸுக்கு தமது ஆதரவை வழங்கி இதுவிடயத்தில் அதனுடன் ஒத்துழைக்கவேண்டும் இந்தியா ஏற்கனவே இவ்விடம் தொடர்பாக தனது பூரண ஆதரவை மொரீஷியஸுக்கு வழங்கியுள்ளது" என்ளுர்.

(கி)

---

பெய்ரூட்படுகொலைகள்

# கமிஷன் முடிவுகளை இஸ்ரேலிய அமைச்சரவை கொள்கையளவில் ஏற்கும்!

### ஷரோன்நிலைகுறித்து திடமான முடிவு இல்லை

டெல்அவிவ், பெப். 10

பெய்ரூட் படுகொலைகள் மீதான இஸ்ரேலிய விசேட விசாரணைக்கமிஷனின் விசாரணை முடிவுகளை இஸ்ரேலிய அமைச்சரவை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

லெபனானிலிருந்த ஷகிலா, ஷப்ரா என்ற இரு பாலஸ்தீன முகாம்களில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு பாதுகாப்பு அமைச்சர் ஏரியல் ஷரோனும் ஒரு சூத்திரதாரி என்று இந்த விசேட கமிஷன் தெளிவாக்கியுள்ளது.

எனவே திரு. ஷரோன் மீதான நடவடிக்கைகள் குறித்து மீண்டும் ஒரு தடவை இஸ்ரேலிய அமைச்சரவை கூடி ஆராயும் ஏற்கனவே இரு தடவைகள் இந்த அமைச்சரவை கூடியிருந்த போதிலும் திடமான முடிவுகள் எதனையும் அது எடுக்கவில்லை.

இஸ்ரேலிய விசாரணைக்கமிஷன்முடிவுகளால் பல முக்கிய ஆளுங்கட்சிப்புள்ளிகள் பாதிப்படைந்துள்ளனரென்று அறிவிக்கப்படுகிறது. (கி)

---

# உலகப் பொருளாதார நெருக்கடி குறைகிறது

நியூயோர்க், பெப். 10

உலகப் பொருளாதாரம் நெருக்கடி நிலையிலிருந்தும் மீண்டு வருவதாக சர்வதேச நிதி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம்வெளியிட்ட கருத்தின்படி, 1930ம் ஆண்டிலிருந்து உலக பொருளாதார நிலை நெருக்கடியான போக்கைக் கொண்டதாக இருந்து வந்துள்ளது. இந்த நெருக்கடி நிலை அண்மை ஆண்டுகளிலேயே உக்கிரமடைந்திருந்தது.

ஆனல் தற்போது சில வருடங்களாக பொருளாதார வீழ்ச்சிவேகம் குறைந்துவருவதை இந்தநிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் வட்டிவீதங்களும் குறைவாக காணப்படுகின்றன வென்று இதனுல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகப் பொருளாதார நிலை சுமாராக இருந்து வருவதைக் கருத்திற்கொண் சர்வதேச நிதிநிறுவனம் தனது வளங்களை இருமடங்காக அதிகரிக்க வேண்டுமென்று அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஆனல் இந்த நிதிநிறுவனம் அவ்வாறு வளங்களை அதிகரிக்கக்கூடாதென்று அபிவிருத்தியடைந்த நாடுகள் எச்சரித்துள்ளன. அதிகரிக்கும் பட்சத்தில் பணவீக்கம் மேலும் ஏற்படலாமென அவை காரணங்காட்டியுள்ளன. (கி)

---

எம். ஜி. ஆர்.

## உண்ணுவிரதம் முடிவுற்றது!

சென்னை, பெ. 10

அரிசி வழங்க வேண்டும் என்று கோரி சென்னையில் ஒரு நாள் அடையாள உண்ணுவிரதமிருந்த தமிழ்நாடு முதல் அமைச்சர், இன்று மாலை 5 மணிக்கு உண்ணுவிரதத்தை முடித்துக்கொண்டார். (க)

---

21-ம் நூற்ருண்டில்

# உலகசனத்தொகை 615 கோடி!

ஸ்ரொக்ஹோம், பெப். 10

21வது நூற்ருண்டு ஆரம்பத்தில் உலக சனத்தொகை 615 கோடியாக இருக்கும் என்று சுவீடனின் ஸ்ரொக்ஹோமில் நடைபெற்ற சனத்தொகை பற்றிய மகாநாடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

வருடந்தோறும் உலக சனத்தொகை 7 கோடியே 50 லட்சமாக அதிகரித்துவருகிறதென்றும், 21ம் நூற்ருண்டில் வருடமொன்றுக்கு 9 கோடியே 50 லட்சமாக இந்த அதிகரிப்பு இருக்குமென்றும் ஸ்ரொக்ஹோமில் தெரிவிக்கப்பட்டது.

அம் மகாநாட்டில் மேலும், வளர்ச்சியடைந்துவரும் மூன்ரும் உலக நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பு கணிசமாக இருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது. அத்துடன் 21ம் நூற்ருண்டின்வருடாந்தசனத்தொகை அதிகரிப்பில் 90 சத வீதமான பங்கை 3ம் உலகநாடுகளே கொண்டிருக்குமென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

---

கடந்த ஆண்டு

# லெபனனிலேயே அதிகளவு மனித உரிமை மீறல்கள்!

### -றீகன் நிர்வாக அறிக்கை தெரிவிக்கிறது

வாஷிங்டன், பெப். 10

கடந்த ஆண்டு லெபனனிலேயே மனித உரிமைகள் பெருமளவு மீறப்பட்டுள்ளன என்று அதிபர் றீகனின் நிர்வாக அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கடந்த யூனில் இஸ்ரேலியப் படைகள் லெபனனில் புகுந்ததையடுத்தே அங்கு மனித உரிமை மீறல் சம்பவங்கள் பெருகினவென்றும், பெய்ரூட் படுகொலைகள் மனித உரிமைகள் மீறலுக்கு சிகரம் வைத்தன வென்றும்தெரிவிக்கப்பட்டது.

1323 பக்கங்களைக்கொண்டதாக இந்த அறிக்கை விளங்குகிறது. இதன் உள்ளடக்கத்தை உபராஜாங்க அமைச்சர் திரு. எலியட் ஏப்ரஹாம் சுருக்கமாக வெளியிட்டார்.

அவர் தமது விளக்கத்தில்; லெபனனுடன், சோவியத் யூனியன், செக்கோஸ்லாவாக்கியா, ஈரான் ஆகியவற்றிலும் மனித உரிமைகள் கடந்த ஆண்டு மீறப்பட்டனவென்றும் தெரிவித்தார்.

பொதுவாக கம்யூனிஸ்ட் நாடுகளில் மனித உரிமைமீறல்கள் கணிசமாக இருந்தனவென்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது. (கி)

---

சிறையதிகாரியின்

# 'கண்ணில் மண்தூவினுர்' யாழ். றிமாண்ட் கைதி

(மாவிட்டபுரம்)

மல்லாகம் நீதிமன்றத்துக்கு யாழ். சிறைச்சாலையிலிருந்து கொண்டுவரப்பட்ட றிமாண்ட் கைதியொருவர் சிறைஅதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிஓடிவிட்டார்.

நேற்றுமுன்தினம் இச்சம்பவம் நடந்துள்ளது.

ஏழாலை மயிலங்காடு என்ற இடத்தைச் சேர்ந்த வைத்தி பத்மநாதன் என்ற கைதியே தப்பிஓடியுள்ளவராவர்.

மல்லாகத்தில் இடம்பெற்ற கொள்ளை முயற்சி ஒன்று தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த இந்நபர் நேற்றுமுன்தினம் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன்முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டுத் தொடர்ந்தும் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டதின்பேரில் நீதி

(9-ம் பக்கம் பார்க்க)


வெள்ளி விழா காணும்
"ஈழநாடு" பத்திரிகைக்கு
எமது நல் வாழ்த்துக்கள்!!

என்.ஐ. சைக்கிள் ரயர்கள்
N. I. BICYCLE TYRES

★ உறுதியான இழை!
★ நீடித்த பாவிப்பு!!
★ சொகுசான ஓட்டம்

விலை ரூபா 40-00

நோர்தேண் இன்டஸ்றீஸ்,
இல: 112, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.
போன்: 23158

### மணிவாக்கு

உனக்காக ஒரு உறுதியான பெட்டியைச் செய்து கொள். ஒவ்வொரு பாகத்தையும் ஜாக்கிரதையாகச் செய், பின் உன் கஷ்டங்களை எல்லாம் அதனுள்வை; உன் தோல்விகளையும் ஏமாற்றங்களையும், இதயதாபங்களையும் அதனுள் வைத்துப்பூட்டு. பிறகு மூடியின் மீது உட்கார்ந்து கொண்டுசிரி.

—ஆடம்ஸ் பாக்கஸ்.

# நமது நோக்கு

## வெள்ளி விழா

'ஈழநாடு' இன்று வெள்ளி விழா ஆண்டில் காலெடுத்து வைக்கிறது. நம்பலாமா? நேற்றுப்போலிருக்கிறது.

வாரமலராகத் தொடங்கி வாரம் இரு முறையென வெளிவந்து. இரு வருடங்களில் தினசரியாகத் தலைநிமிர்ந்து அதற்குரித்தான சவால்களைச் சமாளித்து உயிர் வாழ்கிறதே என்றால் அது ஆண்டவன் திருவருள்.

நல்லோரிணக்கம் நமது பத்திரிகைக்கு தாராளமாக உண்டு; இலக்கண சுவாமிகள், யோக சுவாமிகள் போன்ற பெரியோர் ஆசியை நினைவு கூருவது மிகப் பொருத்தம். எமது முதற் பிரசுரத்தை வாழ்த்திய யோக சுவாமிகள், 'ஏசுவார்கள், எரிப்பார்கள், உண்மையை எழுதுங்கள், உண்மையாய் எழுதுங்கள் என்றுஎச்சரித்தார்; இதுவே எம்மை உயிர்த் துடிப்புடன் பணிபுரிய வைக்கிறது.

தெய்வீகம் பொதிந்த எம் மானின் தீர்க்கதரிசனத்தை ஒருவாறு நிறைவேற்றிவிட்டதால் அவருடைய ஆசி என்றும் வழி நடத்துமென்பது எமது நம்பிக்கை.

இருபத்தைந்தாவது வருடதொடக்கத்தில் எமது சிந்தனை எவ்வாறு அமைகின்றது?

ஈழநாடு ஒரு உழுகிற மாடு; பழமொழிக்கமைய அது உள்ளூரில் நன்றாக விலைப்படுகிறது. பழமொழியைப் பொய்ப்பிக்கும் வகையில் உழுகிற மாடுகள் பல வெளியூரில் விலைப்படும் வேளையில் உயரப் பறக்கும் எண்ணம் எமக்கு என்றும் இருக்கவில்லை என்பதை எடுத்துக்கூறுவதில்பெருமை கொள்கின்றோம். நாம் ஓர் ஊர்க்குருவி; உயரப் பறந்தாலும் பருந்தாகமாட்டோம் என்பது தெரிந்தமையால் எங்கள் கடந்த காலக் கனவுகள் நனவாகின்றன. தன்னை அறிவது பத்திரிகையின் ஆன்மாவுக்கும் அவசியமானது.

எங்கள் மக்களுக்கு குறிப்பாக யாழ்ப்பாண மக்களுக்குப் பொதுப்பணி புரிவதே எமது பிரதான நோக்கம். அவர்கள் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் பத்திரிகை மிக அவசியதேவை; அத்தேவையைத் திருப்திப்படுத்திய சாதனை எமக்கு ஆயிரம் ஆண்டு வாழும் ஊக்கத்தை அளித்திருக்கிறது.

காலைத் தேநீரோடு ஈழநாடு படிப்பது யாழ்ப்பாணத்தில் பல கவலைகளை மறக்க உதவும் பழக்கமாய் விட்டது. யாழ்ப்பாணம் இன்று என்ன நினைக்கின்றது? ஈழநாடு அதனைச் சொல்லவல்லது.

பத்திரிகை வாசித்தல் இன்றைய மனிதன் பூரணப்படுவதற்கு மிக அவசியம் என்பதை எவரும் ஆட்சேபிக்கார். இதனை விருத்தி பண்ணிவரும் எங்கள் பத்திரிகை இன்னொரு ஆங்கில வார இதழ் – Saturday Review – சென்ற வருடம் ஆரம்பமானதைப் பெரிதும் வரவேற்றது.

இன்று அப்பத்திரிகை ஓராண்டு முடிவில் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் அமோக வரவேற்பைப் பெற்றிருப்பது, அதுவும் ஒரு ஆங்கில தினசரியாக மலர்வதற்கு ஒரு தெளிவான அறிகுறியெனலாம்.

'உளவில்லாமல் களவில்லை' என்பது போல், ஆரம்பகாலத்திலேயே யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் உளவுத்திறன் பயிற்சி பெற்ற ஈழநாடு இன்று பல அரசியல் கொந்தளிப்புகளையும் குழப்பங்களையும் எடைபோடும் வல்லமைபெற்று விளங்குகின்றது. அரசியல் கபடத்தை அம்பலமாக்கும் திறமையோடு, ஆக்கபூர்வமான ஆலோசனைகளுக்கு உற்சாக மூட்டிவருகிறது. இது நாம் நம்மைப் போற்றும் செயலாகக் கொள்ளலாகாது; மக்கள் கருத்தில் அடிக்கடி வெளிவரும் பொதுஜன அபிப்பிராயமென்பதால் அதனை இந்த சுபதினத்தில் பணிவுடன் வெளியிடத் துணிந்தோம்.

ஒன்றுய்ச் சுருங்கிவரும் உலகின் தினசரி நிகழ்ச்சிகளை ஊன்றிப் பார்க்கும் அதேவேளையில் அவை எங்கள் நாட்டை எவ்வாறு பாதிக்கின்றன வென்பது எமது முக்கிய கவனத்தை ஈர்த்துவருகிறது. அதுவும் போதாது; தமிழ் மக்களை–தமிழ்ப் பேசும் மக்களை, குறிப்பாக எம்மைப் புடைசூழ வாழும் யாழ்ப்பாண மக்களை உலக அரசியல், இலங்கை அரசியல் எங்கு இட்டுச் செல்கிறது?

இதனை விளக்கும் பேராற்றல் எம்மிடம் பெருமளவிற்கு இல்லாதபோதும், தடைவிடை முறையால் வாசகர்கள் மத்தியில் கருத்துப் பரிமாறும் தூண்டுகோல் போல் தூய கருத்துக்களைத் தெரிந்தெடுக்கும் பணியில் நாமென்றும் தயங்கியதில்லை.

சுடச்சுடச் செய்தியை வழங்குவதே எமது பிரதான கடன். இதற்குரிய ஆள் அணி திருப்திகரமாக இல்லாதபோதும், எதனையும் நழுவவிடாமல் உடனுக்குடன் சமைத்துச்செய்யும் கலையில் நாம் முன்னேறிவருவதும் குறிப்பிடத்தக்கது.

வெள்ளி விழா வென்ற சுபமுகூர்த்தம் இவ்வாண்டு முழுவதிலும் தக்கமுறையில் கொண்டாடப்படவேண்டிய நிகழ்ச்சி. அவ்விதகு தூக்கலம் வாசகர் உலகத்தைப் பொறுத்ததே!

எம்மைப் பொறுத்தளவில் இந்த நன்னாளில் எங்கள் பெருமுயற்சிக்கு உப்பிட்ட ஒவ்வொருவரையும் உள்ளளவும் நினைக்கவேண்டிய கடப்பாட்டை நினைவுறுத்துகின்றோம்.

அடுத்தது; எந்த நெருக்கடியிலும்–தீ – 'சீல்' ஊரடங்கு–தேர்தல் அமளி; பயங்கரவாதப் பித்தலாட்டங்கள்– எவற்றிலும் நிலைதளம்பாத மக்கள் பணியே மகேசன் பணியாகக் கொண்டு நடத்த பேராதரவு புரிந்த வாசகநேயர்கள் அதனைத் தொடர்ந்து வழங்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

# தமிழ்நூல்களில் கூறப்படும் 'ஈழம்' யாது?

'ஈழநாடு' வாரமலராக முதன்முதல் ஆரம்பமானபோது அந்த முதல் இதழை அலங்கரித்த முத்தான கட்டுரைகளில் இது முதன்மையானது. பத்திரிகைக்கு ஈழநாடு என்று பெயர்சூட்டப்பட்டது மிகவும் பொருத்தமே என்பதை நிலைநாட்டுவதாக அமைந்துள்ள இக்கட்டுரையை அமரர் கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் எழுதியிருந்தார்கள் அதனை இங்கு மீளப் பிரசுரிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஆ–ர்



### கலைப்புலவர் க. நவரத்தினம்

''எங்கும் மாமணி
விற்பொலியுங்கதி
ரெங்குந் தாமரையன்னம்
படுமலர்
மங்குறை வனத்திடமுந்திரு
மாவலிகங்கை
நாடெங்கள் நாடே''
— கதிரைமலைப்பள்ளு.

இலங்கையென இன்று அழைக்கப்படும் திலகம் ஒரு காலத்தில் ''ஈழம்'' எனவும் அழைக்கப்பட்டது. தமிழ் பேசும் நிலப்பரப்புகளைச் சேர மண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம், தொண்டை மண்டலம், ஈழ மண்டலம் எனப் பிரித்துக் கூறுவது தமிழ் மரபு. ஈழ மண்டலம் தமிழ்பேசும் பிரிவுகளில் ஒன்றாக விளங்கியது மாத்திரமன்றி, [ஈழநாட்டுப் புலவர்களும், தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றிருந்தனர். நற்றிணை, குறுந்தொகை முதலிய நூல்களில் காணப்படும் சில பாடல்களை எழுதிய பூதனது மகன் தேவன் என்னும் புலவர் ஈழநாட்டவரென்னும். அவர் ஈழத்து பூதந்தேவனார் என்று அழைக்கப்பட்டாரென வும் அறிகின்றோம்.

பட்டினப்பாலையில் ''ஈழத்துணவு'' என்னும் சொற்றொடர் குறிக்கப்படும் நாடு இலங்கைதான் என்பது இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவாகும். பண்டைத் தமிழ் நூல்களில் ஈழம், இலங்கையென்னும் பெயராலும் சூட்டப்பெற்றுள்ளது.

''தொலைமாலிலங்கைக்
கழுவொடு
பெயரிய நன்
மாவிலங்கை''

எனச் சிறுபாணாற்றுப் படையிலும், ''அது கேட்டுக் கடல் சூழிலங்கைக் கயவாகுவென் பான்'' எனச் சிலப்பதிகாரத்திலும், இலங்காதீவத்துச் சமனொளி யென்னும் என்று மணிமேகலையிலும் காணப்படுவன அவற்றுள் சில.

''சங்கிதையை வகத்திரத்தி
னதீவத்
தோங்குயர் சமந்தத்துச்சி
மீமிசை''

என்னும் அடிகளில் கூறப்பட்டுள்ள ''இரத்தினதீவகம்'' என்பதும் ஈழமாகிய இலங்கையையே குறிக்கின்றது.

இவ்விதமாக தமிழ்நூல்கள் கூறப்பட்ட ஈழம், ஒரு காலத்தில் தென் தமிழ்நாட்டுடன் தொடர்புடைய நிலப்பரப்பாக விருந்ததென்பதைத் தமிழ் நூற் சான்றுகள் கொண்டும், நிலஅமைப்பு நூற்சான்றுகள் கொண்டும், பல ஆராய்ச்சியாளர் நிலைநாட்டியுள்ளார்.

### தமிழ் நாட்டு எல்லைகள்

தமிழ்நாட்டுக்கு எல்லைகூற வந்த புலவர்கள் எல்லோரும், ''வடவேங்கடந் தென்குமரி'' எனவும், ''குணகுடல்குமரி, குடகம், வேங்கடம்'' எனவும், ''குணகுடல் குமரி, குடகம், வேங்கடம்'' எனவும், மேற்கடல் கீழ்க்கடல் வேங்கடக்குமரி'' எனவும், குமரியைத் தெற்கெல்லையாக வைத்துக் கூறியுள்ளார்கள். 'குமரி' என்னுஞ் சொல் குமரி யாறையே குறிக்கும் என்பது இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலியோர் கருத்து. குமரியாறு புண்ணியநதிகளுள் ஒன்றென்பது.

''வழி கங்கை யமுனையே
நன்மதை சரஸ்வதி
காவேரி
விழுமியகுமரி கோதாவரி
யெழு நதியின் பெயரே''

என்பதனால் பெறப்படும். குமரி நதியாயின் அதன் தெற்கினும் நிலப்பரப்பு இருந்திருத்தல் வேண்டுமென்பது பெறப்படும். குமரியாற்றுக்குத் தெற்கே பல நாடுகள் இருந்தனவென்றும், அவை கடலால் அழிக்கப்பட்டனவென்றும் பல நூலாசிரியர்களும், உரையாசிரியர்களும் கூறியதோடு, அழிந்த அந் நாடுகள் இன்ன பெயரினவென்றும், இவ்வளவு தூர விலாசமுடையனவென்றும், அவர்கள் கூறிப் போந்தனர், அங்ஙனம் அழிந்த நாடுகளுள்ளே ஏழ் தெங்கநாடு– ஏழ்பனை நாடுகள் கூறப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களால், அந் நாடுகளில் தென்னையும், பனையும், மிக்கிருந்தனவென்பது அறியக் கிடக்கின்றது. இப்போதுள்ள குமரி கோட்டுக்குத் தென் மேற்கிலும், தென்கிழக்கிலும், சமுத்திர மத்தியிலே சிதறுண்டு கிடக்கும். மாலைதீவு, இலங்கை முதலிய தீவுகளில் தென்னை மிக மலிந்து இடத்தலும், குமரிக் கோடி முதல் தொண்டிவரையுமுள்ள பகுதிகளிலும், யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், அதன் பக்கத்திலேயுள்ள தீவுகளிலும், இராமேச்சுரத்திலும், பனை மிக்கிருப்பதும், இப்பகுதிகள், அழிந்த நாடுகளிற் சிறுபகுதிகள் என்பதை வலியுறுத்துதல் காண்க இதுமாத்திரமின்றி கன்னியாகுமரி முதல் வடக்கும் வடகிழக்கும், வடமேற்கும், நெடுந்தூரம் வியாபித்திருக்கும். செம்புரைக் கற்பார் இலங்கையிலுங் காணப்படுதலால், இடையேயுள்ள கடல்வாய்ப்பட்டழிந்த ஏழ்தெங்க நாட்டில் மிஞ்சிய பகுதியாய ஈழம் என்பதும் பெறப்படும். செம்புரைக் கற்பார் காணப்பட்டமையாற் போலும் இலங்கை ''தம்ப

''தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ள 'ஈழம்' ஒருகாலத்தில் தென் தமிழ் நாட்டுடன் தொடர்புடைய நிலப் பரப்பாகவிருந்ததென் பதைத் தமிழ் நூல் சான்றுகள் கொண்டும் நில அமைப்புச் சான்றுகள் கொண்டும் ஆராய்ச்சியாளர்கள் நிலைநாட்டியுள்ளார்கள்''.

[10–ம் பக்கம் பார்க்க]

## வாழிய ஈழநாடே

இம்மையென மறுமையென இருமைநிலை
தமை உணர்ந்த தவ ஞானி
செம்மைமிகு யோகர்தம் ஆசியினால்
செழித்து ஓங்கும் ஈழநாடே,
தர்மம்இது அதர்மம்இது எனநாடித்
தர்மம்ஒன்றே போற்றும் பண்பால்
நம்மவரும் மற்றோரும் உளம்உவப்ப
வெள்ளிவிழாக் காண்பாய் வாழி.

செஞ்சாலி நல்வயலும் செழுங்கதலித்
தோட்டமும் சேர் யாழ்ப்பாணத்தே
தஞ்சாது பகலிரவு சோம்பாது
தூய்மைமிகு கற்றோர் சொல்லும்
அஞ்சாமை பண்புடைமை அறம்விலகாக்
கொள்கை இவை அனைத்தும் தாங்கி
நெஞ்சாரப் பணியாற்றும் நின்னுடைய
தனித்துவத்தால் நிலைத்தாய் வாழி.

வாசகராம் வண்டினங்கள் காலைமலர்ந்
ததும் நாடும்மல ரேஆகிப்
பேசுபல செய்திகளும் பொருளார்கட்
டுரைகவிதை பிறவும் மேலாம்
ஆசிரியத் தலையங்கம் ஆயநறுந்
தேனுடனே வருவாய் வாழி
நேசமுறு மனத்தினர்கள் மிகநாடும்
நல் ஏடே ஈழநாடே.

-ம. பார்வதிநாதசிவம்.

# மக்கள் பணியில் மேலும் ஒரு கட்டம்!

1961ம் ஆண்டைத் திரும்பிப் பார்க்கின்றேன். 'ஈழநாடு' நாளேடாகப் பரிணமித்திருந்த காலம் அது. சத்தியாக்கிரகப் போராட்டம் உச்சக் கட்டத்தை எட்டியிருந்தவேளை.



அமரர் கே. பி. ஹரன்

அமரர் கே. பி. ஹரன் நிர்வாக ஆசிரியர்பொறுப்பிலும், திரு. ராஜ அரியரத்தினம் ஆசிரியர் பொறுப்பிலும், திரு. எஸ் எம். கோபாலரத்தினம் செய்தி ஆசிரியர் பொறுப்பிலும் அமர்ந்திருந்தனர். திரு. ரி. எம். முருகையா வெளிநாட்டுச் செய்திகளுக்குப் பொறுப்பாகவிருந்தார்.

காரியாலயம் இரவு பகலாக சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது.

காலையில் ஒரு பதிப்பு, பகலில் ஒரு பதிப்பு, மாலையில் ஒரு பதிப்பு என்ற வகையில் பத்திரிகை வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம். யாழ் நகரில் இடம்பெற்றுவந்த சம்பவங்களை சூட்டோடு மக்களுக்குத் தருவதில் 'பிஞ்சு'ப் பத்திரிகையான ஈழநாடு ஏனைய பெரிய பத்திரிகைகளோடு ஈடு கொடுத்து முன்னின்றது.

அன்றைய ஈழநாடு ஆசிரியர் குழுவினரும், ஏனைய ஊழியர்களும், நிர்வாகிகளும் அவ்வாறு இரவுபகலென்றுபாராது அர்ப்பணித்த பணியானது இன்று 'ஈழநாடு' வெள்ளிவிழா காணும் அளவுக்கு நிலைக்கவும் இன்னும் பலவிழாக்களைக் காணவும் உரமாக அமைந்தது என்பதை நன்றியோடு நினைவு கூரவேண்டும்.

1969ம் ஆண்டு 'ஈழநாடு' தனது 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியபோது வெளியிட்ட மலரில் 'மக்கள் பணி – பெருந்தூரப்பயணத்தில் ஒரு கட்டம்' என்ற தலைப்பில் எழுதியபோது பின்வருமாறு அக்கட்டுரையை ஆரம்பித்திருந்தேன். 'தொலைதூரப்பிரயாணம்ஒன்றைமேற்கொள்ளும் ஒருவன் இடையில் தங்கி சற்று ஓய்வெடுத்துக் கொள்ளும் பொழுது நிதானமாக தான் கடந்து வந்துள்ள காட்டாறுகளையும், கரடுமுரடான பாதைகளையும் எதிர்கொண்ட இடைய துன்பங்களையும் ஒருமுறை எண்ணிப் பார்த்து புன்னகை புரிந்து கொள்வதுபோல் இந்த விழாவும் அமைகிறது...''

இன்று வெள்ளிவிழாவினை எட்டிவிட்ட நிலையிலும் அதே வழிப்போக்கன் நிலையிலேயே இருக்கின்றோம் என்றால் மிகையன்று.

பழைய சம்பவங்களையும், அனுபவங்களையும் அசை போட்டுக்கொள்வதும் பயனுள்ள காரியம் தானே!

அங்ஙனம் அசைபோடும்போது ஒரு சிலரின் நினைவுகள் மீண்டும் மீண்டும் மனதில் சுழல்கின்றன.

அமரர் டாக்டர் கே. சி. சண்முகரத்தினம் அவர்களில் ஒருவர்.

புன்னகை மாறாத முகத்துடன் அவர் காரில் வந்திறங்குவதும் கட்டிடத்துக்குள் நுழைவதும் குறித்த சில நிமிடங்களுக்குள் சகல பகுதிகளையும் நோட்டம் விட்டுக்கொண்டு தமது அறைக்குத் திரும்புவதும் – நேற்று நடந்ததுபோல் பசுமையாக தோற்றுகின்றது.

அவரது நிர்வாகத்திறமை, ஊழியர்களை அவர் நடத்திய பாங்கு, சுகதுக்கங்களில் காட்டிய அக்கறை – எந்த ஊழியரும் மறந்து விடுவதற்கில்லை.

அமரர் ஆசிரியர் கே. பி. ஹரனின் முறுவல் பூத்தமுகமும் 'பலே பலே' என்று சக ஊழியர்களை மனமார அவர் தட்டிக்கொடுத்து உற்சாக மூட்டும் விதமும் சுவையான உரையாடல்களும் பரபரப்பின்றி செய்திகளை உள்ளது உள்ளபடி பிரசுரிக்கவேண்டும் என்பதில் அவர் காட்டி வந்த கண்டிப்பும் நினைவுக்கு வருகின்றன.

அமரர் ஏ. ஈ. தம்பர் அவர்கள் தூயவெள்ளை ஆடையும், சால்வையும் மூக்குக்கண்ணாடியுமாக நடந்து வரும் காட்சி மனதில் திரையோடுகின்றது. அவரது அறிவுரைகள் – ஞாபகமறதிகள் – பழைய தலைமுறைச்சம்பவங்களை அவர் எடுத்துக்கூறுவதை கேட்பதே சுவையான ஒரு



அமரர் டாக்டர்
கே. சி. சண்முகரத்தினம்

அனுபவமாகும்.

திரு. எம். எஸ். கோபாலரத்தினம் அவர்களின் சுறுசுறுப்பு இரவு பகலென்று பாராமல் பத்திரிகாலயத்திலேயே முழு நாளைப்போக்கும் பழக்கம் பிரச்னையான அரசியல் விஷயங்கள் பிரசுரமாகும்போது ஏற்படும் சிக்கல்களை எதிர்நோக்கிச் சமாளிக்கும் திறமை போன்றவை நினைத்துப்பார்க்கவேண்டியவை.

வெளிநாட்டுச் செய்திகளைத் துறைபோக அறிந்து வைத்துக் கொண்டு தாம் எழுதும் செய்திகள் – கட்டுரைகளில் அவைகளைப் பின்னிப்பிணைந்து எழுதி வாசகர்களுக்கு வழங்குவதில் திரு. ரி. எம். முருகையா தனித்துவமாக விளங்கினார்.

இவர்கள் அனைவரதும் முன்னோடி நடவடிக்கைகள் பின்னால் வந்தவர்களுக்கு பலவகையில் வழிகாட்டலாக அமைந்தன எனலாம்.

## நோக்கமும் கொள்கையும்

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பத்திரிகையின் போக்கிலும் – அமைப்பிலும் மாற்றங்களைச் செய்வதற்கு அவ்வப்போது சில முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் அவை நிறைவேறவில்லை.

செய்திகளைப் பரபரப்பாகப் பிரசுரித்து – வாசகர்களைக்கவர வேண்டும் என்று சிலர் கருதினார்கள்.

கவர்ச்சியான தலைப்புக்களையும் – படங்களையும் பிரசுரித்து பத்திரிகையின் விற்பனையை அதிகரித்திருக்கலாம் என்று சிலர் யோசனை கூறினார்கள். நிர்வாகத்தில் சிலவேளைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் இதற்கு காரணமாக இருந்தன.

பத்திரிகையின் கொள்கையும் நோக்கங்களும் அதன் ஆரம்பகாலத்திலேயே நிர்ணயிக்கப்பட்டு விட்டன. இவை ஸ்தாபனத்தின் தலைவரான திரு. கே. சி தங்கராசா அவர்கள் முதலாவது இதழில் எழுதிய கட்டுரையில் நன்கு தெளிவு படுத்தப்பட்டுள்ளன. (அக்கட்டுரை இவ்விதழின் 7-ம் பக்கம் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது)

காலமாற்றங்களுக்கும் சமூக சூழ்நிலைகளுக்கும் ஏற்ப சிந்தனைகள் மாறலாம். எனவே கொள்கைகளும் மாறுவது இயற்கை. ஆனால் அதனை தனிப்பட்ட எவரும் செய்துவிடமுடியாது. அவ்வாறு செய்வதாயின் அக்கொள்கைகளை உருவாக்கியவர்களின்உள்ளார்ந்த உணர்வுகளைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே 'ஈழநாடு' கொண்ட கொள்கையில் மாற்றம் எதுவுமின்றி தொடர்கின்றது.

இருபத்தைந்து ஆண்டுகளில் 'ஈழநாடு' தனக்கென ஒரு மரபினை உருவாக்கிக் கொண்டு விட்டது. அந்த மரபினின்றும் நழுவிச் செல்வதை மக்கள் விரும்ப மாட்டார்கள்.

## நவீன மயம்

'ஈழநாடு' 25 ஆண்டுகள் ஆகியும் கூட அதன் தொழிற்பாடுகள் இன்னமும் நவீனமய மாக்கப்படவில்லையே என்ற ஆதங்கம் இருந்தே வருகின்றது.

(10-ம் பக்கம் பார்க்க)

## 'எத்தனை ஆனந்தம்'

நாம் வளர்த்த பேரன்புச் செல்வன் இடர்பல தாண்டி வெள்ளிவிழா நாயகனாக உயர்ந்துவிட்டான் என்று எண்ண, எண்ண எத்தனை ஆனந்தமாக உள்ளது. பேரின்ப இதயத்துடன் முழு மன நிறைவுடன் எம் உள்ளம் கவர்ந்த செல்வனவன் மேலும் பல்லாண்டு, பல்லாண்டு காலம் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனிடம் அவரின் ஆசியை வேண்டி இறைஞ்சுகின்றோம்.

-வாசகர்
உரும்பராய்.


இப்போது கையிருப்பில் உண்டு.

தரம் சிறந்த, விலை குறைந்த

## சென்ட்ரிக் N100 வீட்டுபயோகப் பம்பு

தரச் சிறப்புகொண்ட சென்ட்ரிக் வகையருக்களுள் இது ஒரு புதிய ரகம், ஆம், தரமான இப்பம்பு மிகமிக் குறைந்த விலையில் கிடைக்கிறது

தரமான பொருள்கொண்டு, கைதேர்ந்த வேலைப்பாட்டில் உருவாக்கப்பட்டது சென்ட்ரிக் N100, இதற்கான மோட்டரும் பம்புக்கு ஈடுகொடுக்கும் வகையில் அமைந்தது, எல்லா சென்ட்ரிக் பம்புகளையும் போலவே N 100 பம்பும் தரம் குன்றாது நேர்த்தியாக உருவமைக்கப்பட்டுள்ளது, சென்ட்ரிக் N 100 ஆண்டாண்டு காலம் தொல்லையில்லாத சேவை புரிவதற்கு இதுவே உத்தரவாதம்.


★ கடின உழைப்புதரும், முற்றிலும் மூடப்பட்ட, விசிறியில் குளிராகும் இன்டக்ஷன் மோட்டர்.


★ வார்ப்புப் பித்தளை இம்பெலர் சகிதம் கடின உழைப்பு தரும் வார்ப்பிரும்பு பம்பு.

சென்ட்ரிக் - ஒரு சீவிய கால முதலீடு.

CENTRIC

ரூபா 1,850/-






சிறந்த பராமரிப்புச் சேவையுண்டு.
ஜினசேன லிமிட்டெட்,
4, ஹுணுப்பிட்டிய ரோட்,
கொழும்பு 2. தொலைபேசி: 26558 - 9

75 YEARS 1905 1980 JINASENA LIMITED

Mel Ads




ஏஎம்டபிள்யூ தொழில் நுட்பத்தையும் நவீன இயந்திரங்களையும் உபயோகப்படுத்தி இலங்கையில் டயர் புதுப்பித்தலை ஒரு கலையாக்கியுள்ளது.

ஏஎம்டபிள்யூவின் புதுப்பித்த டயர்கள் தரத்தில் மிகவும் சிறந்தவை காரணம் முப்பது வருட அனுபவத்தின் பயன்.

ஏஎம்டபிள்யூ டயர் புதுப்பித்தலில் இலங்கையில் முன்னோடிகள்......

இரண்டு வாரங்களில் :
900 x 20
825 x 20
750 x 20 Town/Country

மற்றவை மூன்று வாரங்களில்



TEAM

**அசோஸியேட்டட் மோட்டார்வேய்ஸ் லிமிடெட்**
185, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. தொலைபேசி: 33371—8.

**ஏஎம் டபிள்யு புதுப்பித்த டயர்களுடன் பணத்தை சேமியுங்கள்**

# தமிழ் மக்களின் கருத்துக்களுக்கு ஓர் அரங்கமே 'ஈழநாடு'

(1959ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதி வெளியான 'ஈழநாடு' முதலாவது வார இதழில் திரு. கே. சி. தங்கராசா அவர்கள் இப்பத்திரிகையின் நோக்கம், செயல்பாடுகள் பற்றி விளக்கி எழுதிய கட்டுரை இது.)

ஈழநாடு இலங்கையின் வரலாற்றில் மிகமுக்கியமான தொரு கட்டத்திலே தோன்றியுள்ளது. சிக்கல்கள் மிகுந்துள்ள இன்றைய நிலையில் எத்திக்கை நோக்கிச் செல்லவேண்டுமெனத் தெரியாது தமிழ் பேசும் மக்கள் திகைத்து நிற்கின்றனர். இவ்வேளையில் உண்மை தெய்வீகமானது; கருத்துரைகள் கட்டுப்பாடற்றவை என்ற பத்திரிகா தர்மத்தை இலக்காகக்கொண்டு, உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கவும், கருத்துரைகளைப் பரிமாறிக் கொள்ளவும் ஈழநாடு உதயமாகியுள்ளது.

தமிழ் மக்களிடையே நிலவி வரும் பலதரப்பட்ட கருத்துக்களுக்கு ஓர் அரங்கமாக உதவுவதற்கும், தெளிவாகச் சிந்தித்து நிலைமைகளை நன்கு ஆராய்வதற்குமாகவே இவ்வார இதழ் வெளிவருகின்றது. இத்தகையதொரு வெளியீடு மக்களுக்கு அவசியமென்பதில் கருத்துவேற்றுமைக்கு இடமேயில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், மலைநாட்டிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் தமிழுடையின்றித் தங்கள் உளப்பாங்கை வெளியிடுவதற்கு இன்று ஒரு பத்திரிகை அவசியமென்பதை இலங்கைவாழ் தமிழ்மக்களின் எதிர்கால நல்வாழ்வில் அக்கறையுள்ள அனைவரும் ஒப்புக்கொள்வர். இந்த அவசிய தேவையை நிறைவேற்றுவதற்காகவே மிகுந்த இன்னல்களுக்கிடையில் ஈழநாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரனைவருக்கும் பொதுவான பத்திரிகை இல்லையென்றே கூறவேண்டும். ஒரு சில பத்திரிகைகள் உளவாயினும் அவற்றுட் சில அரசியல் கட்சி சார்புடையனவாகும். வேறு சில சமயப்பற்றுள்ளனவாகவும் பணியாற்றிவருகின்றன.

## வேற்றுமையில் ஒற்றுமை காண....

ஈழவள நாட்டிலே பல சமூகத்தினர் இருக்கின்றார்களெனினும், தமிழரின் சொந்தப் பண்பாட்டினையும், உரிமைகளையும் எடுத்துரைக்கும் போது பிற சமூகத்தினரும் இந்நாட்டில் வாழ்ந்துவருகின்றனர் என்பதை உணர்ந்து, வேற்றுமையில் ஒற்றுமை காண முயலவேண்டும். ஒற்றையாட்சி நிலவும் இந்நாட்டில் மனித உரிமைகளைப் பெறுவது சாத்தியமானதா? அடிப்படை உரிமைகள் அனைத்தும் நன்று பாதுகாக்கப்படுமா? அன்றேல் சமஷ்டி தான் இலங்கைக்கு உகந்ததா? மாகாண சுயாட்சி முறை எமது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றத் தக்கதா? இவைபோன்ற கேள்விகளுக்கு விளக்கம் தரும் கருத்தரங்கமாக ஈழநாடு விளங்கும்.

தமிழினத்தின் பொருளாதார நிலை இன்று மிகமோசமாகிக் கொண்டுவருகின்றது. தமிழ் மக்கள் அரசாங்க சேவையை நம்பி வாழும் காலம் மீண்டும் வரப்போவதில்லை. உத்தியோகப் பதவிகள் சம்பந்தமான தேர்வுகளில் அரசாங்கம் பாரபட்சமின்றி நடந்தாலும்கூட, இன்றைய நிலையிற் போதிய உத்தியோகங்கள் கிடைக்குமென நாம் எதிர்பார்க்கவே முடியாது. இந்நிலையிலே புத்தம் புதிய துறைகளை ஆராய்ந்து நமது பொருளாதார நிலையைச் சீராக்க வழிவகைகளைத் தேடவேண்டும். தலைமுறை தலைமுறையாகத் தமிழர் வாழ்ந்து வந்த பகுதிகளிற் பொருளாதாரச் சீரமைப்புக்கான புதிய பணிகளை நாம் மேற்கொள்ளவேண்டும். அதனை விடுத்துப் பொருளாதார விருத்திபற்றி வெற்றுரை பேசித் திரிவதிற்பயன் எதுவுமில்லை.

## பொருளாதார வளர்ச்சிக்கு உதவ...

பொருளாதார விருத்தி இரு துறைப்பட்டது. ஒன்று தனிப்பட்டவர்களின் முயற்சியை அடிப்படையாகக் கொண்டது. மற்றது அரசாங்கத்தின் முயற்சியை அடிப்படையாகக் கொண்டது. தனிப்பட்டோரின் முயற்சி அனைத்தும் தமிழர் கையிலேயே தங்கியிருக்கிறது. இவர்கள் தமிழர் வதியும் இடங்களில் உள்ள மூலவளத்தை ஆராய்ந்து, தகுந்த திட்டத்தை ஒருமுகமாகச் சமர்ப்பித்தாலன்றி அரசினரிடமிருந்து மிகுந்த பயனைப் பெறமுடியாது. வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்துவரும் தமிழ் பேசும் முஸ்லிம்களின் ஆதரவும், மலைநாட்டில் வாழும் தமிழ் மக்களின் நட்புறவும், பொதுவாக இலங்கைக்கும், சிறப்பாகத் தமிழினத்தின் பொருளாதார வளனுக்கும் இன்றியமையாதன என்பதை இங்கு எடுத்துக் காட்டவேண்டியதில்லை.

தமிழரிடை கல்வி பயின்ற நடுத்தர வகுப்பினருக்கு, அரசாங்கசேவையில் பதவிகள் தேடுவதிலேயே இதுவரை கவனம் செலுத்திவந்தோம். தமிழினத்தின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி நாம் சிந்தித்ததே கிடையாது. இது உண்மையாகவே கவலைக்குரியது. கமக்காரரையும், தொழிலாளரையும் எதிர்நோக்கி நிற்கும் சிக்கல்களை நீக்க இனியேனும் நாம் அயராது உழைக்க வேண்டும். இதனோடு இணைந்துள்ள மற்றொரு சிக்கல் தாழ்த்தப்பட்டோர் எனப் பெயரிட்டு நாம் ஒதுக்கி வைத்துள்ள சிறுபான்மைத் தமிழரைப் பற்றியதாகும். மக்களாட்சி, சமூக நீதி என்றெல்லாம் பேசப்படும் இந்நாட்களிலே தாழ்த்தப்பட்ட சமூகம் என நம்மில் ஒரு பகுதியினரை நாம் ஒதுக்கிவைத்துவிட்டு தமிழினத்தின் உரிமைகளுக்காகப் போராடுவது அர்த்தமற்றதாகும். இவர்களுக்கு விளைவிக்கப்பட்டுள்ள அநீதிகள் அனைத்தும் அறவே அகற்றப்படவேண்டும்.

சாதிமதப் பாகுபாடுகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நீக்கி, தமிழ்மக்களை ஒருமுகப்படுத்தி அவர்களை ஆக்கபூர்வமான முயற்சிகளில் வழிப்படுத்துவதற்கு ஈழநாடு பணிசெய்யும். பின்தங்கிய நாடுகளை இன்று பசியும், பிணியும், வறுமையும் வாட்டிவருகின்றன. இவற்றை நீக்குவதற்குப் பொதுவுடைமை ஆட்சிதான் சிறந்ததென்ற கருத்து வலுப்பெற்றுவருகின்றது. இவற்றை நீக்குவதற்குப் பொதுவுடைமைதான் இலங்கைக்கு உகந்ததென ஒரு சாரார் கூறுகின்றனர். உரிமைகள் இழந்துநிற்கும் தமிழ் மக்களைக் காப்பாற்றும் சக்தி பொதுவுடைமை ஆட்சிக்கே உண்டென கூறுவோருமுளர். இவர்கள் அனைவரினதும் கருத்துக்கள் இப் பத்திரிகையில் இடம்பெறும்.

வறுமையினின்றும் விடுதலை பெற்று வாழ்க்கையை நடத்துவதற்கு நிலையான வருவாயைத் தேடிக்கொள்வது பொருட்செல்வத்தைப் பொறுத்தமட்டில் வரவேற்க வேண்டியதுதான். அதேவேளையில் அருட்செல்வத்துக்குரிய ஆத்மீகப் பண்புகளையும் ஈழநாடு பேணிக் காக்கும். கல்வி, கலாசார விருத்திகளுக்கான துறைகளில் ஈழநாடு மிகுந்த கவனம் செலுத்தும். இன்று தொழிற்கல்வி உடனடியான தேவைகளில் ஒன்று. கலாச்சாரப் பயிற்சியின் அடிப்படையிலே தான் தொழிற்கல்வி அமையவேண்டும். இத்தனைக்கும் தொழில் வல்லுனர் நாட்டுக்குக் கண்ணின் மணி போன்றவர்கள். இவர்களோடு திரமன்றி, கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள், நாட்டியக் கலைஞர்கள், இசை வல்லுநர்கள், தத்துவஞானிகள் எல்லோரும் நாட்டிற் பெருகவேண்டும்.

சொந்த நாட்டிலே சகல இனத்தினரும், மதத்தினரும் அரசியல், பொருளாதார உரிமைகளைப் பெற்றுச் சுதந்திரத்துடன் இணைந்து வாழ ஈழநாடு உழைத்துவரும். உலக அரங்கிலே பஞ்சசீலம், இணைந்து வாழ்தல் என்ற அடிப்படையில் ஈழநாடு உலகசமாதானத்தை வளர்க்கத் துணைசெய்யும்.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் எதிர்கால வாழ்வில் அக்கறை கொண்டுள்ள அனைவரிடமிருந்தும் ஈழநாடு கருத்துரைகளை எதிர்பார்க்கின்றது. அத்துடன் குறைபாடுகளை எடுத்துக்காட்ட வாசகர்கள் தயங்கவேண்டியதில்லை. ஈழநாடு தனது எதிர்காலத்தை தமிழ்பேசும் மக்களிடம் ஒப்படைப்பதுடன், தமிழ்மக்களின் நல்வாழ்வுக்கே தன்னையும் சமர்ப்பணம் செய்கின்றது.

## சரித்திரத்தின் சுருக்கம்

1956 ஜூலை மாதம் அச்சகக் கட்டிடத்துக்கான அடிக்கல் இடப்பட்டது. 1958ல் முதல் கட்டம் பூர்த்தியாயிற்று. கட்டிடம் முடிவுற்றதும் 'கலாநிலைய பதிப்பகம்' என்ற பெயரில் செயல்பட ஆரம்பித்தது.

''ஸ்ரீமத் இலக்கண முத்துக்குமார தம்பிரான் சுவாமிகளின் நினைவு மலர்'தான் இங்கு முதன் முதல் அச்சிடப்பட்ட பிரசுரம். 1959ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதி 'ஈழநாடு' முதலாவது வார இதழ் வெளியிடப்பட்டது. வார இதழ் இரண்டாவது ஆண்டிலேயே வாரம் இருமுறை இதழாகி மூன்றாம் ஆண்டில் தினசரியாக வெளிவந்தது.

(பெ)

# உலகுக்கு 'யாழ்ப்பாணத்தை' காட்டும் பத்திரிகை

பெரும் பள்ளப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்பது ஒரு தேவாரத்தின் கடைசி அடி. ஆனால் தினசரி வாழ்வில் இன்று பலரின் முதலாவது படி தினசரிப் பத்திரிகை வாசித்தலே. தான் உலகத்தைப் பாராமலும், உலகு தன்னைப் பார்ப்பதை அறியாமலும் கண்மூடி உறங்குபவன் மனிதன். இவன் கண்விழித்ததும் உலகை அவனுக்குக் காட்டும் கண்ணாடியாய் விளங்குவது பத்திரிகையே. வாழ்வைப்புரிந்து கொள்ளுவதற்கு பத்திரிகை இன்றியமையாத பண்டமாய் விட்டது. ஒவ்வொருநாட்டையும் தனித்தனியே பல கோணங்களில் காட்டும் பத்திரிகைகளுக்கு இணையாக நமது இலங்கையின் தலை கரான கொழும்பில் இருந்து பல பத்திரிகைகள் பறக்கின்றன.

தன்முகத்தைத் தனக்குக் காட்டும் கண்ணாடி போல் யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்கட்கு வாய்த்திருப்பது இந்த 'ஈழநாடு' பத்திரிகையே. இங்கு வாழ்பவர்கட்கு முகத்தைக் காட்டும் ''ஈழநாடு'' வெளி உலகில் உள்ளவர்கட்கு யாழ்ப்பாணத்தையே காட்டும் பண்புடன் மிளிர்கின்றது.

உலகில் ஒரு புள்ளிபோல் விளங்குவது இலங்கைப்படம். இலங்கையாகிய மாம்பழத்தை உலகமாகிய விருட்சத்துடன் ஒட்டவைக்கும் மூகிழ் போலவும், இலங்கைமாதாவின் முடி மணிபோலவும் விளங்குவது யாழ்ப்பாணமே. யாழ்ப்பாணத்தின் முதன்மை முக்கியத்துவம் என்பனவற்றிற்கு மட்டுமன்றிப் பரப்புக்கும் பொருத்தமாக வெளிவரும் ''ஈழநாடு'' யாழ்ப்பாண மக்களுக்கு ஒருவரப்பிரசாதமே எனலாம்.

'அருளாளன்'

## ஈழநாடே போற்றுகின்றேம்

ஈழம்வாழ் தமிழ்மக்கள் போற்றுகின்ற நாளிதழே!
ஈழநாடே! நீயென்றும் வாழ்க!

தமிழ்வளர்க்கும் நற்பணியே அரும்பணியாய் இயற்றிவரும்
தமிழ்ச்சுடரே நீயென்றும் வாழ்க!

எட்டுத் திசைகளிலும் கிட்டுகின்ற செய்திகளை
இட்டமுடன் தருமேடே வாழ்க!

போற்றுங்கால் போற்றி வேண்டுங்கால் இடித்துரைப்பாய்
போற்றுகின்றேம் உன்பணியை நயந்து!

வண்ணையுறை சிவனும் நல்லைவளர் செவ்வேளும்
கண்ணெனவே உனைக்காப்பார் என்றும்!

'முருகு'

# தமிழக எழுத்தாளர்கள் யாழ். வருகிறார்கள்

[யாழ்ப்பாணம்]

தமிழக எழுத்தாளர்கள் மூவர் இம்மாதம் 18, 19, 20 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணத்தில் கலை இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். சிதம்பரம் ரகுநாதன், ராஜம் கிருஷ்ணன், டாக்டர் ராமகிருஷ்ணன் ஆகியவர்களே யாழ்ப்பாணம் வரவிருக்கும் எழுத்தாளர்களாவர்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும். பாரதி நூற்றாண்டுவிழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்துள்ள இவ் எழுத்தாளர்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பாரதி நூற்றாண்டு இறுதி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார்கள்.

இதில் ஒரு நிகழ்ச்சியாக இம்மாதம் 19-ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறும். பாரதி நூற்றாண்டு விழா இறுதி நிகழ்ச்சியில் இவர்கள் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றுவார்கள். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்.கிளையின் ஆதரவில் இந்நிகழ்ச்சிக்கு பேராசிரியர் டாக்டர் கா. சிவத்தம்பி தலைமைவகிப்பார்.

18-ம் திகதி எழுத்தாளர்கள் சந்திப்பும் கலந்துரையாடலும் யாழ். பல்கலைகழகத்திலும் ஏனைய கலை இலக்கிய நிறுவனங்களிலும் இடம் பெறும்.

## பண்டிதர் முயற்சியினால்

### தமிழில் அட்டவணை!

[யாழ்ப்பாணம்]

பாராளுமன்றத்திலுள்ள சபை முதல்வரின் அலுவலகத்தினால் வெளியிடப்படும் பாராளுமன்ற அமர்வு விபரங்களைக் குறிக்கும் மாதாந்த தேதி அட்டவணையைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் இது வரை வெளியிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டு இதுதொடர்பாக ஊர்காவற்துறை எம்.பி பண்டிதர் க.பொ.இரத்தினம் எடுத்துள்ள நடவடிக்கையினால் தற்போது தமிழ் மொழியிலும் இம் மாதாந்த அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழமையாக அனுப்பப்பட்டுவரும் பாராளுமன்ற அமர்வு விபரங்களைக் குறிக்கும் மாதாந்த தேதி அட்டவணையைச் சபை முதல்வர் அலுவலகம் சிங்கள ஆங்கில மொழிகளில் மட்டும் வெளியிட்டு வருவது தமிழ் மொழியை புறக்கணித்துவரும் செயலாகும் என்று பண்டிதர் இரத்தினம் சுட்டிக்காண்பித்ததைத் தொடர்ந்து சபை முதல்வர் பிரதமர் ஆர் பிரேமதாசா தமிழ் மொழியிலும் இந்த அட்டவணையை வெளியிடுமாறுபணித்திருந்தார் எனவும் அதன்படியே தற்போது தமிழ் மொழியில் அட்டவணையை சபை முதல்வர் அலுவலகம்வெளியிட்டதாகவும் எம்.பி.பண்டிதர் இரத்தினம் தெரிவித்தார்.

[சு,நி]

## யாழ்.மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்க தீர்மானம்

(பண்டத்தரிப்பு)

யாழ்.மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் எதிர்வரும் ஜூன் மாதத்தில் பாடசாலைகளுக்கிடையில் வேதாகமப் போட்டியொன்றையும் ஜூலை மாதத்தில் நடமாடும் வேதாகமப்பயிற்சியொன்றையும் நடத்துவதென்று தீர்மானித்துள்ளது.

யாழ் மறைக் கல்வி நிலையத்தில் நடைபெற்ற சங்கஆட்சி மன்றக் கூட்டத்தில்இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. துணைத் தலைவர் திரு சி அந்தோனிமுத்து தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இதர முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு:-

கிளைகள் தோறும் விசேட பொதுக்கூட்டங்களை நடாத்தி ஆசிரியர்களை சங்கப் பணிகளில் ஊக்குவித்தல்

எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் கிளைகள்ரீதியாக ஞான ஒடுக்கங்களை நடாத்துவது.

தற்போது 6 ரூபாவாக இருக்கும் சந்தாப் பணத்தை 10 ரூபாவாக அதிகரிப்பது.


# வாழ்க்கை முழுவதும் ஆயிரம் தொல்லைகள்.




இன்றைய வாழ்முறை வேகத்திற்கேற்ப முழுநாளும் தேவைப்படும் சக்திச் சமனிலையை எனது குடும்பத்திற்கு வழங்க வேண்டியது தாய் என்ற முறையில் எனது கடனாகிறது. இல்லையேல் என் குடும்ப சுகாதாரம் சீர்குலைந்துவிடும் என்பதை நான் நன்கு அறிவேன்.

எனவே தான் எனது குடும்பத்திற்கு வேண்டிய மேலதிக சக்திக்கு நெஸ்டோமோல்ட் வழங்குவதென்று நிச்சயப்படுத்தியுள்ளேன்.

முழுச் செழுமை மிக்க நெஸ்டோமோல்ட், முழு ஆடைப்பால், விட்டமின் B, மோல்டட் பார்லி சாரம் கொண்ட தூய ஆரோக்கிய உணவு.

என்குடும்பம் எப்பொழுதும் ஆரோக்கியத்துடனும், சுறுசுறுப்போடும் திகழ்வதால்,

நெஸ்டோமோல்ட் டிற்கு எனது நன்றி.

450 கிராம்: ரூ. 43 90




Nestlé

நெஸ்டோமோல்ட்

உங்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த உகந்த பானம்

HTL CN 1141

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
முரட்டுக் காளை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

ரீகல் (யாழ். நகர்)
15-ந் திகதியுடன்
எங்க வீட்டுப் பிள்ளை
வெளியேற இருக்கிறர்
அதற்குள் சந்தியுங்கள்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
Body Heat
(Adults only)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ்,
ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்துதரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ். நகரில் இதுவே கடைசி சந்தர்ப்பம்
இன்னும் சில தினங்கள் மட்டும்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

ஸ்ரீதர் கடைசிவாரம் தினசரி 4 காட்சிகள் (யாழ். நகர்)
எம். ஜி ஆர்
ஜெயலலிதா
நாகேஷ்
நம்நாடு
14th&15th SNOW WHITE AND SEVEN DWARFS

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00 9-30
9th—14th "FRENCH FILM FESTIVAL"
11th only:
LES FOUBERIES De SCAPIN
(The LIES OF SCAPIN) (Color)

மனோகரா தினசரி 10-30, 2-15, 6-00, 9-45
(யாழ். நகர்)
ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ்
கே. மாலதி, எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி
பாதாள பைரவி
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

ராஜா தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (ஈஸ்ட்மன் கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

# இன்றைய பலன்

**தை மாதம் 29-ந் திகதி வெள்ளிக்கிழமை (11—2—83)**

மேடம்: காரியத்தில் வெற்றி கிடைக்கும், கவர்ச்சியான சம்பவங்களுக்கும் இடமுண்டு. புதிய முதலீட்டில் உற்சாகம் பிறக்கும். வாகனம் செலுத்துவோர் சிறப்படைவார்கள்.

இடபம்: வாழ்க்கையில் புதிய நம்பிக்கை உதயமாகும், நீண்டநாள் கோரிக்கை இன்று நிறைவேறலாம், வீட்டில் சுமுகமான சூழ்நிலை தென்படும், நல்ல தினம்.

மிதுனம்: எதிர்பார்த்த முடிவில் ஏமாற்றம் தென்படும், உடன் பிறந்தவர்களாலேயே பல தொல்லைகள் தோன்றக்கூடும், சிலரின் கெடுபிடி நடவடிக்கை ஆத்திரத்தை ஏற்படுத்தும்.

கடகம்: பொன்னான சந்தர்ப்பமொன்று உங்களைப் பூரிப்படையச்செய்யும். தேடிய உறவு உங்களை நாடியே வரலாம், இளம் பருவத்தினர்களுக்கு இன்று இன்பப் பூங்கா.

சிங்கம்: தொல்லைகள் அலைமோதும், மன நிம்மதியைத் தேடி அலைவீர்கள், குடும்பத்தில் சிறு பிணிக்கு இடமேற்படலாம், வைத்தியச் செலவுகளுக்கும் இடமுண்டு.

கன்னி: உழைப்பினுல் வெற்றிக்கு அழைக்கப்படுகிறது, அதிக பிரயாசையின் மூலம் ஆதாயம் கிடைக்கும், பிரயாசகார சித்தை மேலிடும். பிதா வழிச் சுகம் உண்டு.

துலாம்: ஆளும் பொருளும் இன்று உறுதியளிக்கப்படுகின்றது, சிலர் வாழ்க்கையில் அதிகாரப்பேறு கிடைக்கலாம், நீண்ட பயணத்தைத் தவிர்க்கவும்.

விருச்சிகம்: தெளிந்த மனத்துடன் செயலாற்றப் புறப்படுவீர்கள், திரைப்படத்தொழில் சம்பந்தப்பட்டவர்கள் சிறப்படைவார்கள். பணவிவகாரம் திருப்தியைக் கொடுக்கும்.

தனு: தானியத் துறையில் நட்டம் ஏற்படலாம். கொடுக்கல் வாங்கல் மூலம் சண்டை மூளப்படும், உடன் தொழில் ஆற்றுவோருடன் உறவு வேண்டாம்.

மகரம்: நிச்சயமற்ற நிலையில் வேதனைப்படுவீர்கள், உடல் நலத்தில் அதிக கவனம் வேண்டும், ஊண் விடயத்தில் சுகாதாரம் விரும்பத்தக்கது. நாவடக்கம் நன்று.

கும்பம்: பேச்சுவன்மையினுல் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள். கல்வித் துறையில் திருப்திகரமான முன்னேற்றம் உண்டு. சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம்.

மீனம்: நம்பிக்கை மோசம் நடக்கக்கூடும். நண்பர் ஒருவர் உமது காலை வாரிவிடுவதற்கு முயற்சி எடுக்கலாம், செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## சி. பா. தமிழர் நலன்புரிச்சங்கம்

[புலோலி]

வடமாகாண சிறுபான்மைத் தமிழர் நலன்புரிச்சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ். ஐக்கிய சன்மார்க்க வாலிபர் சங்கத் தலைவர் திரு அ. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

சிறுபான்மைத் தமிழர் நலன்புரிச் சங்கம் என்ற பரந்துபட்ட இயக்கத்தின் கீழேயே சிறுபான்மைச் சமூக மக்களை ஐக்கியப்படுத்தி எமது குறைகளை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறவேண்டும் என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.


சிறுபான்மைச் சமூகத் தமிழர்களை நியமன எம். பியாகவும், மாவட்ட அபிவிருத்தி சபைகளில் நியமன உறுப்பினர்களாகவும் நியமித்துப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்றும், தூதுவர் பதவி நியமனங்கள், அரசாங்க அதிபர் உதவி அரசாங்க அதிபர் பதவிகளுக்குச் சிறுபான்மைச் சமூகத்தவர்களையும் நியமிக்கவேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கோருவதெனவும் முடிவு செய்யப்பட்டது. (வெ)

## கண்களில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்துக்கருகிலுள்ள சிறை அதிகாரிகளின் அறையில் வைக்கப்பட்டிருந்தார். அச்சமயம் அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிய இந்நபரை அதிகாரிகள் துரத்திப்பிடிக்க முயற்சித்தபோதிலும் அவர் ஓடித் தலைமறைவாகிவிட்டார்.

இந்நபர்பற்றிய விபரம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டு உஷார்படுத்தப்பட்டுள்ளது.



இலங்கையில் தயாராகிக்கொண்டிருக்கும் 'இளைய நிலா' வர்ணப் படத்தின் முக்கிய நடிகர்களான தியாகராஜனும், சுவப்னாவும் தோன்றும் ஒரு காட்சி இது. முடியும் தறுவாயிலுள்ள இப்படத்தின் வெளிப்புறக் காட்சிகள் சில இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் படமாக்கப்படவிருக்கின்றன. முதல் தடவையாக யாழ்ப்பாணம் வரும் இந்திய கலைஞர்களைப் பாராட்டுவதற்காக இன்று மாலை திறந்தவெளியரங்கில் நிகழ்ச்சி ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

## வெளிநாடுசெல்ல பணம் கிடைக்காததால் தற்கொலை!

[புலோலி]

வெளிநாடு செல்வதற்கு உடனடியாக 25,000 ரூபா பணம் தருமாறு அண்ணனைக் கேட்ட தம்பி அண்ணன் உடனடியாகப் பணத்தைத் கொடுக்காமையினுல் மனமுடைந்து நச்சுத்திரவமருந்தி தனது உயிரைப் போக்கிக் கொண்ட சம்பவமொன்று அல்வாயில் நிகழ்ந்துள்ளது.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி மகேஸ்வரன் [வயது 23] என்ற இளைஞனே நச்சுத்திரவமருந்தி தனது உயிரைப் போக்கி கொண்டவராவர்.

இவரது மரணம் சம்பந்தமான விசாரணைகளை வடமராட்சிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு தி வேலுப்பிள்ளை பருத்தித்துறை நீதவான் திரு. வி பி. சுந்தரலிங்கத்தின் பணிப்பின் பேரில் மேற் கொண்டார். பருத்தித்துறைப்பொலிஸ் கான்ஸ்டபிள் சி. கந்தசாமி சாட்சிகளை ஆஜர் செய்தார்

விசாரணையின் போது சாட்சியமளித்த இறந்தவரின் தமையனுர் குறிப்பிட்டதாவது:

இறந்த எனது சகோதரன் வெளிநாடு செல்வதற்காக உடனடியாக 25000 ரூபா தருமாறு என்னைக் கேட்டார். அவர் மது அருந்துதல், புகைபிடித்தல் பழக்கங்கள் உள்ளவர் இதனுல் நான் வெளிநாடு செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்த பின்னர் தான் காசு தருவேன் என்று கூறினேன்.

உடனடியாகப் பணம் கொடுக்காமையால் இவர் மனமுடைந்து காணப்பட்டார். இவரது தீயபழக்க வழக்கங்களினுலேயே எங்கள் தகப்பனுரும் தற்கொலை செய்திருந்தார்.

சம்பவதினம் இவர் மருந்து குடித்து விட்டார். உடனே மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அவர் அங்கு மரணமானுர்.

இறந்தவரின் தாயார் க. வடிவாம்பிகை. க விஜயகுமார் மந்திகை அரசினர் வைத்திய சாலை டாக்டர் எஸ். யோகநாதன் ஆகியோரின் சாட்சியங்களை அடுத்து வேலுப்பிள்ளை தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## சனசமூகநிலைய நிர்வாகிகள்

(மயிலிட்டி)

பலாலி புனித செபஸ்தியார் சனசமூகநிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு திரு. யு சிங்கராசா தலைமையில் நடைபெற்றது நிர்வாக உத்தியோகத்தர் விபரம் வருமாறு: தலைவர்: திரு. யு. சிங்கராசா, செயலாளர் திரு. கிறிஸ்தோ மாகிலாமணி, உப தலைவர்: திரு பி ஏ யோண் பீற்றர், உபசெயலாளர்: செல்வி அ மாகில் அன்டோயினற், பொருளாளர்: திரு. பிராஸ்சிஸ் லெனுட், பத்திராதிபர்: திரு பே கிறிஸ்ரோ, நூலகர்: செல்வி பற்றிமா யோசேப் நிர்வாக அமைப்பும் தெரிவு செய்யப்பட்டது.

## இனக்கலவர...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

டும் என்றும் தெரிவித்தார்.

அரசதரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஐ ஞானதாசன் முதலாவது சாட்சியின் இருப்பிடத்தைப் பொலிஸாரால் தெரிந்துகொள்ளமுடியவில்லை என்றும், 2வது சாட்சியின் இருப்பிடம் தெரிந்தும் அழைப்பாணையைச் சேர்ப்பிக்க முடியவில்லை என்றும், இவ் விஷயத்தில் தாம் மேலதிக சொலிசிட்டர் ஜெனரலின் ஆலோசனையைப்பெற விரும்புவதாகவும், மீண்டும் ஒரு தவணை தருமாறும் கேட்டுக்கொண்டார்.

எதிரிகள் வீண் சிரமத்திற்கு ஆளாகவேண்டியுள்ளது என்றும், பொலிசார் உண்மையான சிரத்தை எடுத்தால் அவர்களுக்கு அழைப்பாணையைக் கொடுக்கமுடியும் என்றும் சாட்சிகள் வருடாவருடம் மடுத்தேவாலயப்பண்டிகைக்கு வருவதோடு அயலூரான தெட்சிணமருதமடுவாசிகளைத் துன்புறுத்துவதாகவும், எதிரிகளைச் சார்ந்தவர்களை ருகம புகையிரத நிலையத்திலும் தாக்கியுள்ளார்கள் என்றும், அவர்களின் சாட்சியத்தை திரு சன்சோனியும் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் எதிரிகளின் சட்டத்தரணி கனக மனோகரன் வாதிட்டார்.

விசாரணையைப் பங்குனி 30ம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி இனி எதிரிகளை கோர்ட்டுக்கு வரத்தேவையில்லை என்றும், மன்றின் அறிவித்தல் கிடைத்தால் வரவேண்டுமெனவும் தெரிவித்தார் இவ் வழக்கில் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கனக. மனோகரனுடன் சட்டத்தரணி கே. எஸ். பாலகிருஷ்ணர் ஆஜரானுர். (அ)

## மக்கள்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

அவ்வப்போது ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார பாதிப்புகள் இவனை சாத்தியமில்லாமல் செய்து விட்டன, என்றாலும் வாசகராகிய மக்களின் ஆதரவு என்றும் போல் நிலைத்து நிற்பதாலும் பெரியோர்களின் ஆசியும் இறைவனின் அருளும் பத்திரிகையைக் காப்பற்றி வந்துள்ளன.

1971ம் ஆண்டில் தென்னிலங்கையில் ஏற்பட்ட இளைஞர் எழுச்சியினால் நாடு முழுவதும் அவசரகாலம் பிரகடனமாகிப் பல வருடங்கள் அது தொடர்ந்தபோது 'ஈழநாடு' பெரிதும் பாதிக்கப்பட்டது. பத்திரிகைத் தணிக்கையினாலும், செய்திகள் கிடைப்பதில் வசதியின்மையாலும் இந்தப் பாதிப்பு. சில சமயங்களில் வானொலியை மாத்திரம் நம்பி செய்தி சேகரிக்கும் நிலை. எமது கஷ்டத்தை நன்குணர்ந்த மக்கள் எம்மோடு நின்றார்கள். அதனால் தான் 1981-ம் ஆண்டு ஜூன் 1ம் திகதி 'ஈழநாடு' கட்டிடம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதை அறிந்ததும் அக்கணமே பலர் ஓடோடி வந்து கண்கலங்கி நின்றார்கள்!

அன்றோடு பத்திரிகை ஒழிந்தது என்று மனப்பால் குடித்து மகிழ்ந்தவர்களுக்கு 6ம் நாளே மீண்டும் அது வெளிவந்ததும்— மக்கள் ஆர்வத்தோடு படிக்க ஆரம்பித்ததும் தோல்வியாக முடிந்தது.

●

பத்தாவது ஆண்டு மலரில் 'நெடுந்தூர பிரயாணத்தில் ஒரு கட்டம்' என்று எழுதினேன். இன்னும் ஒரு கட்டத்தை எட்டிப் பிடித்திருக்கும் இன்றைய வேளையில் அன்றைய கட்டுரையின் இறுதிப் பகுதியில் ஒரு பந்தியை இங்கு மீளவும் எடுத்தாள்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

''காலமும் விஞ்ஞானமும் முன்னேறிக்கொண்டிருக்கின்றன. இதனால் இன்னும் பல்வேறு வகையான நவீன யந்திர சாதனங்கள் பத்திரிகைகளை மேலும் நவீனமயமாக்கி விடக்கூடும். இந்தப் போட்டியில் 'ஈழநாடு' பின்தங்க நேரிட்டாலும் வாசகனதும் வாசகன் வாழும் சமுதாயத்தினதும் சமுதாயம் வாழும் நாட்டினதும் மேம்பாட்டையே தனது குறிக்கோளாகக் கொண்டு தனது எளிமையான வழியில் 'ஈழநாடு' தொடர்ந்து பணி புரிந்து வருமென்று நம்புவோம்''.

விரைவில் புதிய யந்திரசாதனங்கள் வந்துசேரவிருப்பதாக ஸ்தாபனத் தலைவர் திரு. கே. சி. தங்கராசா தகவல் தெரிவித்துள்ளார்கள். இதனைத் தொடர்ந்தும் புதிய பொலிவுடன் 'ஈழநாடு' வெளிவர வாய்ப்பேற்படும்.

தலைவர் அவர்களின் விருப்பப்போல் காலவற்றிலும் இப்பத்திரிகை வளர்ந்து தமிழினத்துக்குப் பணிபுரிய இறையருளை வேண்டுவோம்.

## லிங்கஉற்பவ நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா சமிதியினர் நாடெங்கிலும் மகாசிவராத்திரி தினத்தை விமரிசையாக இன்று கொண்டாடவுள்ளனர்.

மாத்தளை பூபாலகிருஷ்ண ஆச்சிரமத்தில் சிவராத்திரி தினத்தையொட்டி லிங்க உற்பவ நிகழ்ச்சி இடம் பெறவுள்ளது.

சுவாமி பிரேமானந்தஜி, லிங்க உற்பவ நிகழ்ச்சியை நடத்திவைத்து, அருளுரை நிகழ்த்துவார். பஜனைக் கச்சேரிகளும் நடைபெறவுள்ளன. [மா]

## யெகோவா மாநாடு

(யாழ்ப்பாணம்)

யெகோவாவின் கிறிஸ்தவ சாட்சிகளின் வட்டார மாநாடு மன்னார் சித்தி விநாயகர் மகா வித்தியாலத்தில் நாளைக் காலையும் பதின்மூன்றும் திகதி காலை முதல் மாலை வரையும் நடைபெறவுள்ளது.

## தமிழ் நூல்கள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பனணி'' என அழைக்கப் பட்டது. இக்கால நில அமைப்பாளராய்ச்சியாளர், இந்துசமுத்திரம் முன்னொரு காலத்தில் நிலப்பரப்பாக இருந்ததென்றும். அந்நிலப் பரப்பு ஆபிரிக்காவையும், கிழக்கிந்தியத் தீவுகளையும், ஆஸ்திரேலியாவையும் இணைத்து விளங்கியதெனவும் கூறுவர். இம்முடிபுகள் தமிழ் நூல்கள் கூறும் கருத்துக்களுக்கு ஆதாரமளிப்பனவாகும்.

இந்து சமய இதிகாச புராணங்களில் பல யோசனை தூரம் விசாலித்திருந்ததும், இலங்காபுரியெனும் தலைநகரையுடையதுமான ஒரு நாட்டை சூரபத்மன், இராவணன் முதலிய அரசர்கள் சிறப்புடன் ஆண்டுவந்தார்களென்றும்கூறுகின்றன. இவ்வரசர்களின் காலம் இப்பொழுது வழங்கியிருக்கும் சரித்திர காலத்திற்குமுற்பட்ட காலமாகும். எனவே இந் நிகழ்ச்சிகள் சரித்திர ஆதாரமற்ற கர்ணபரம்பரைக் கதைகளாக இன்று எம்மால் கருதப்படுகின்றன. நாம் இதைக் காறும் கூறியவற்றால், பண்டைய ஈழம் தென் தமிழ்நாட்டுடன் தொடர்புடைய நிலப்பரப்பாகவிருந்ததென்பதும், இங்கு தமிழ்ப் பழங்குடிகள் வாழ்ந்தார்களென்பதும் பெறப்படும்.

### பௌத்தம் வருமுன்

பூர்வீக நாட்டில் வாழ்ந்த மக்கள் தமிழர்கள்தான் என்பதும், அவர்கள் பேசிய மொழி தமிழ் என்பதும், அவர்கள் பின்பற்றிய சமயம் சிவசம்பந்தமுடையதென்பதும் ஆராய்ச்சியாளர் பலர் துணிபாகும். பௌத்த சமயம் இலங்கைக்கு வருவதன்முன் மக்கள் சைவ சமயத் தொடர்புடையவராகவே விளங்கினர்கள் மகாவம்சம் முதலிய வரலாற்று நூல்களாலும், புதைபொருளாராய்ச்சியாளர் கண்டெடுத்த பொருட்கள் பலவற்றாலும் ஈழநாட்டில் மிகப் பண்டைக்காலம் தொட்டே, சிவ வழிபாடு பரவியிருந்ததென்பது துணியப்படலாம்.

ஈழநாட்டுச் சரித்திரமும், [illegible] வாசையும், [illegible] [illegible] டன் நெருங்கியதொடர்புடையதாகக் காணப்படுகிறது. [illegible] சமயம் வாய்க்கும்காலங்களில் விரித்துரைப்பாம்.

எம்மவரில் சிலர் ஈழம் என்பது வட இலங்கையை மாத்திரம் அதிலும் யாழ்ப்பாணத்தையே குறிக்குமெனக் கருதுகின்றனர் வேறு சிலர் ஈழமண்டலம் என்பது இப்பொழுது தமிழ்மக்கள் பெரும்பாலும் காணப்படும் வடமகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும்மாத்திரம் குறிக்குமெனவும் கருதுகின்றனர். இக்கருத்துக்கள் பிழையென்பதும்—

''ஆதிதரு திருமூலர் சிவ
பூமி யென்றிதனை
யன்றறுத் யிட்டருளினார்
ஒக்கு தேவாரம் பெறுந்தல
மிரண்டு சிவ
[illegible] ளியாத மென்றிளஞ்
சேய் எய்த
வோங்கும் திருப்புகழ்த்தலை
மூன்று சிவநதி
யுள்ளது நால் [illegible]
கமச்

எனவரும் ஈழமண்டலசதக அடிகளால் அறியப்படும்.

காலப்போக்கில். சமய சமூகத்துறைகளிலும், அரசியற் துறைகளிலும் [illegible] மாறுதல்கள் ஏற்பட்டவாயினும், ஈழநாட்டில் தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் சைவ சமயமும் அன்றுபோல் இன்றும் சிறந்து விளங்குவது மகிழ்ச்சிக்குரிய நிலையன்றோ! இப்பண்புகளை அழியவிடாது – காத்துவளர்ப்பது ஈழமணித்திருநாட்டிலுள்ள தமிழ்மக்கள் பெருங்கடனாகும். இவ்வழியில் 'ஈழநாடு' என்னும் இச்சீரிய வார இதழ் பணியாற்றத் தொடங்கியுள்ளது. இது 'இலங்கைத் தமிழர்கள்வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறித்து வைக்கக்கூடிய நிகழ்ச்சிகளிலொன்றாகும்.

வாழ்க ஈழமணித் திருநாடு!
வாழ்க 'ஈழநாடு' வார இதழ்!


* வெளிநாட்டுப் பயணமா?

யாழ்ப்பாணத்திலேயே குறைந்த கட்டணத்தில் எந்த நாட்டிற்கும் விரும்பிய விமானத்தில் செல்ல

★ விமான டிக்கட்டுகள்

★ பிரயாண காசோலைகள்

(AMERICAN EXPRESS TRAVELLER CHEQUES)

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

மக்கினென் டிறவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
த. பெ. எண் 92, தொலைபேசி: 24154


## பொத்துவில் எம். பி. குணமடைகிறார்

(யாழ்ப்பாணம்)

சுகயீனம் காரணமாக கடந்த மாதம் 26ம் திகதி யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொத்துவில் முதலாவது எம். பி. டாக்டர் எம். ஏ. எம். ஜலால்தீனின் உடல்நிலை தேறிவருவதாக வைத்திய ஆலோசனை நிபுணர் டாக்டர் எஸ் சிவகுமாரன் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு அறிவித்துள்ளார்.

டாக்டர் ஜலால்தீன் இவ்வாரம் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறி, வீட்டில் சிறிது காலம் ஓய்வெடுத்த பின்னர் வழமையான கடமைகளை மேற்கொள்ளலாமென்றும் டாக்டர் சிவகுமாரன் ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளார். [வெ]

## சுவாமி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைக்கூட்டணியுடனும் தொடர்புவைத்திருப்பதாலேயே சுவாமிஜி அடிக்கடி யாழ்ப்பாணம் சென்றுவருவதாக அநாமதேயக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

இதுசம்பந்தமாக சுவாமிஜி குறிப்பிட்ட அரச அதிகாரிகளுக்கு அளித்த பதிலில் தாம் தமிழனாக இருப்பதால், இந்துக்கள் வாழும் இடமான யாழ்ப்பாணத்தில் தெய்வீகக் கடமை ஆற்றுவதற்காக அடிக்கடி அங்கு செல்வதாகத் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

சுவாமி பிரேமானந்தஜியின் ஆசிரமக்கிளை சுன்னாகத்தில், யாழ். காங்கேசன்துறை வீதியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து வரும் மார்ச்மாதம் 12-ம் திகதி சுவாமிஜி லண்டன் செல்லவுள்ளார். (மா)

## ஆட்கொணர்வு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம், ராணுவத்தளபதி மேஜர் வீரதுங்கா ஆகியோரை 17-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ)

## சிங்கராயர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பேசுகையில் கூறியதாவது:

'வண. பிதா சிங்கராயர் எழுதிய கடிதம் குறித்து, நான் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. ஆனால், அவர் கடிதத்தில் எழுதியுள்ள விஷயங்கள் குறித்து, பொறுப்பானவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வற்புறுத்துகிறேன். மனிதனின் அடிப்படை உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும்,

'ஜனாதிபதிக்கு எழுதப்பட்டுள்ள இக்கடிதம் குறித்து, இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென்பதையும் அறியவிரும்புகிறேன்'

நல்லூர் எம். பி, திரு. எம், சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. திலகர் காரில் வரும்போது, இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு, மரியாதைக் குறைவாக நடத்தப்பட்டுள்ளார். 45 நிமிட நேரம் இராணுவத்தினர் இவருடன் வாக்குவாதப் பட்டுள்ளனர். இவ்விஷயம் குறித்து உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.'

## கிறிஸ்தவ ஆசிரியர் மன்றக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

இலங்கை கிறிஸ்தவ ஆசிரியர் மன்ற யாழ். மாவட்டக் கிளையின் ஆண்டுக்கூட்டம் நாளை யாழ். றிம்மர் மண்டபத்தில் கிளைத்தலைவர் திரு. எஸ். ஜெபநேசன் தலைமையில் நடைபெறும். பிரதம அதிதியாக வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை கலந்துகொள்வார்.

## மாணவர்கள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அடிப்படை மனிதஉரிமை மீறல், மற்றும் மதகுருமார், விரிவுரையாளர் தம்பதிகள், இளைஞர்கள் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டித்து காங்கேசன்துறை கல்விவட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலை உயர்வகுப்பு மாணவர்களே மேற்படி உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளுகின்றனர்.

## சபையில்..,

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மெல் பதவிப்பிரமாணம் செய்து கொள்ள எழுந்தார்.

அரசியல் திட்ட ஷரத்துக்களுக்கமையவே இங்கு எல்லாம் நடைபெறுகின்றனவென்று சபாநாயகர் தெரிவித்தார்.

ஒழுங்குப்பிரச்னை நிராகரிக்கப்பட்டு, திரு ஹெனிடி மெல் பதவிப்பிரமாணஞ்செய்தார்.

சரத்: எம்.பிக்களை மாற்று நடுகை செய்கிறார்கள்.

சபாநாயகர்: அபிப்பிராயங்கள் தேவையில்லை.

அனுரா: ஜனநாயகத்துக்கு அவமானம்.

சபா: பவித்திரமான இடங்கு.

ஆனந்த தஸநாயக்கா: அற்புதமான விஷயம்.

திரு. ஹெனிடிமெல் பதவிப்பிரமாணம்எடுத்தபின் முனபகுதியில் அமைச்சருக்குரிய ஆசனத்தில் அமராமல் பின் ஆசனம் ஒன்றில் அமருகிறார்.

## மரண அறிவித்தல்

S. R. பரஞ்சோதி

திரு. சிவராமலிங்கம் பரஞ்சோதி 8-2-1983-ல் பரமபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், சிவாஜி [சிங்கர்], Dr. வத்சலா [U K] ஆகியோரின் தந்தையும், பரமநாதன் [எஞ்சினியர் U K], பாலரத ஆகியோரின் மாமனாரும், ஜகத், மஞ்சுளா, அரவிந்தன் ஆகியோரின் பாட்டனாரும், திருமதி பரமநாதன் [உயரப்புலம், ஆனைக்கோட்டை], காலஞ்சென்ற தில்லையம்பலம், செந்திநாதன், மகேசன் ஆகியோரின் சகோதரரும், துரைசிங்கம், மகேஸ்வரி, ஈஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் லண்டனில் (63, Baronsmede London W 5-4 LS) 12-2-83 சனிக்கிழமை நடைபெறும்.

தகவல்: P. Shivaji, 36, Castle Lane, Bambalapitiya. 6159

[illegible] Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126